461

ஸம்புடம் 12
ஸஞ்சிகை 8

ஸ்ரீ:

விஜய ௵
ஆவணி ௴

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

[ஸ்ரீ அழகியசிங்கர் நியமநத்தால்
மாதந்தோறும் ப்ரசுரமாகும்
ஸ்ரீ அஹோபிலமடத்துப் பத்ரிகை]

यस्याभवद्भक्तजनार्तिहन्तुः पितृत्वमन्येष्वविचार्य तूर्णम् ।
स्तम्भेऽवतारस्तमनन्यलभ्यं लक्ष्मीनृसिंहं शरणं प्रपद्ये ॥

தனிப்ரதி விலை 0—4—0

வர்ஷச்சந்தா
ரூபாய் 3-0-0

AUGUST 1953
VOL 12 NO 8.

விஷய ஸூசிகை

விஷயம் பக்கம்

1. திருமங்கையாழ்வார் வைபவம் ... 218

[ஸ்ரீ அஹோபிலமடம் ஆஸ்தாநவித்வான், தேசிகதர்சநவிஜயத்வஜ புத்தங்கோட்டகம், ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, ஸ்ரீரங்கம்.]

2. கார்முகம் வெற்றிதந்த விதம் ... 221

[ஸ்ரீ. உப. ஈ. தே. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, திருவஹீந்திரபுரம்.]

3. உபயவேதாந்த ஐககண்ட்யம் ... 223

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

4. ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதார வைபவம் ... 225

[ஸ்ரீ. உப. ஒரகடம், கே. ஸுதர்சநாசார்ய ஸ்வாமி, ரிடையர்ட் தமிழாசிரியர், அவளூர்.]

5. ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம் ... 231

[ஸ்ரீ. உப. A. V. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A., B.L., அட்வோகேட், திருச்சி.]

6. திருப்பாவைக்கதை ... 235

[ஸ்ரீ. உப. திருவரங்கம், திருமாலைதாதாசார்ய ஸ்வாமி, M. O. L. திருப்பதி.]

7. 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சாரக்ரமம் ... 239

8. செய்திகள் ... 241

9. பட்டாபிஷேக மஹோத்ஸவம் ... 244

[ஸ்ரீ. உப. வித்வான் காரக்குரிச்சி, கோபாலரங்காசார்யர் ஸ்வாமி, மாம்பலம்.]

10. பட்டாபிஷேக சரித்ரமாலா ... 245

[ஸ்ரீ. உப. வித்வான் வேலாமூர் ரா. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி, பந்தல்குடி.]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:



ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா

ஸம்புடம் 12 } விஜய ௵ ஆவணி ௴ { ஸஞ்சிகை 8

'அஹோபிலே காருடஶைலமத்யே
க்ருபாவஶாத் கல்பிதஸந்நிதானம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் ஶரணம் ப்ரபத்யே ||'

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

என்னும் ஸ்ரீ அஹோபில மடத்துப் பத்ரிகையைப்பற்றி

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்.

ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஶ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோத்திதா |
ஶ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபக்தானாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஶ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்கள் உள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக்கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த 'ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா' என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹாலக்ஷ்மியுடன் நித்யமாக வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் வைபவம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

ஆனாலும் திருமங்கையாழ்வார் பாரதபூமியில் ஹிமவத்பர்வதம்தொடங்கி ஸேதுபந்தஸ்தலமான திருப்புல்லாணி வரையிலுள்ள எல்லாவெம்பெருமான்களையும் திருவடிதொழுதிருப்பதால் இந்த பூமியில் ப்ரதான க்ஷேத்ரமாய் முதலில் சொல்லப்பட்ட 'நரநாரணனுயுலகத்தறநூல் சிங்காமைவிரித்தவன்' என்கிறபடியே ஸகலஶாஸ்த்ரார்த்தஸங்க்ரஹரூபமான திருவஷ்டாக்ஷரத்தின் உபதேசமூலமாக ஸர்வமநுஷ்யர்களையுமுஜ்ஜீவிப்பித்த பதரீநாராயணனையோ அல்லது 'ஸக்ருதேவ ப்ரபந்நாய..ஏதத் வ்ரதம் மம' என்றுதன்னைஶரணமடைந்த ஸர்வ ப்ராணிகளையும் ஸம்ரக்ஷிப்பதையே தனக்கு வ்ரதமாகக்கொண்டு காக ஸுக்ரீவவிபீஷணாதிகளை ஶரணாகதியினாலே ஸம்ரக்ஷித்து பாரதபூமியின் தெற்குக்கோடியில் விளங்கும் புல்லாணிஎம்பெருமானையோ அல்லது ப்ரஹ்மதேவன்முதல் ரகுவீரபர்யந்தர்களான உத்தமபுருஷர்களாலாராதிக்கப்பட்டவனாய் தமக்கு முன்பவதரித்த வெல்லா ஆழ்வார்களினாலும் பல்லாண்டுபாடப்பட்டவனாய் 'தென்னாடும் வடநாடும் தொழநின்ற திருவரங்கம்' என்கிறபடியே ஸகல மநுஷ்யர்களாலும் தொழுதேத்தப்பட்ட திருவரங்கத்தெம்பெருமானையோ ஶரணமாக அடைவது உசிதமாகும். இந்த திவ்யதேசத்தெம்பெருமான்களைவிட்டு திருவிண்ணகரான் திருவடிகளை ஶரணமாகவடைந்ததற்குக் காரணமென்னென்னில்: முற்காலத்தில் பூர்வஜன்மஸுக்ருத விசேஷத்தினாலே அயோநிஜர்களாய் பசிதாகாதிகளான ஸம்ஸார தோஷவாஸநாவிஹீநர்களாய் பகவதநுபவத்தையே தாரகபோஷகபோக்யங்களாகவுடையவர்களாய் 'நயவேன் பிறர்பொருளை....வருமாறென் நம்மேல்வினை' என்கிறபடி அபராதப்ரஸக்தியின்றிக்கே இருந்த முதலாழ்வார்கள்போலன்றிக்கே இத் திருமங்கையாழ்வார் அநேகஸம்ஸாரிகளோடு ஸமானமான ஜன்மாஹாரநித்ராவிஷயாநுபவநிரதராயிருந்ததோடு சோழராஜனிடம் ஸேநாபதியாயிருந்து 'மருவலர் தமுடல்துணிய வாள்வீசும்பரகாலன்' என்கிறபடியே பரஹிம்ஸாநிரதராய் 'மானேய்கண் மடவார் மயக்கில்பட்டு மாநிலத்து நானே நானாவிதநரகம்புகும் பாவம் செய்தேன்' என்கிறபடியே தம்மை ஸுதுஷ்க்ருதராய் நிச்சயித்திருக்கையாலே அப்படிப்பட்டவபராதங்களுக்கு அநுகுணமாக தண்டதாரனான ஸர்வேச்வரனுடையசீற்றத்தைமாற்றி அவனுக்குதமது விஷயத்தில் பொறுமையை உண்டாக்குகிற விஷயத்தில்: 'ஸஸந்தேஶாத்.....ரக்ஷா ராக்ஷஸீ உக்ரீவ ஹஸ்த ஹஸ்தாஹம் தேஜஸா' என்று ஸாபராதவிஷயத்தில் நிக்ரஹஸங்கல்பமுள்ள பெரியபிராட்டியாருடைய புருஷகாரத்தைக் காட்டிலும் 'உபசிதகுருபாப்மா ப்ரஸ்துதோபி ப்ரணேதும் ப்ரணதவதி ஸ்ரீநாத யஸ்யாம் த்ருஷ்ட்யாம் க்ஷமிணே கோபிநாதஸ்ய திஷ்ணா- நாம் ஸ்வ ஸ்வீயகாருண்யாவதாரைவ ||' 'யஸ்யாஸ் ஸாஹம் ஸகலஜகதாம் ஸ்ருஷ்டிஸம்ஹாரலீலா ஸ்ரீநாத ப்ரதிஜ்ஞா நீநாம் பதவ்யோ ஜிதஶோபம் | தேவதாநம் ஸம்ஸாரவிஶ்ராந்தி ஶரணாரவிந்தே ஸவம் ஸதே நநு ஸர்வாயிதம் க்ஷமா க்ஷமா ||' என்று ஸ்ரீதேசிகன் பூஸ்துதியிலருளிச்செய்த அர்த்தத்தை ரஹஸ்யசிகாமணியில் 'க்ருதாபராத: ஸ:' என்கிற ச்லோகத்தில் 'நவ யுவஜநதிர்ஷ்யயஸீதியக்ஷமோ' என்கிறபடியே அபராதிகளிடத்திலும் குற்றத்தையே அறியாதவளாகையாலே ஸர்வம்ஸஹையான பூமிப்பிராட்டிக்கு ஸர்வேச்வரனைக்காட்டிலும் பெரியபிராட்டியாரைக்காட்டிலும் க்ஷமாதிகுணபூயஸ்தை உண்டாயிருக்கிறது' என்று ஸ்பஷ்டமாக அருளிச்செய்தபடியே பூமிப்பிராட்டியினுடைய புருஷகாரமுள்ளவெம்பெருமான்பக்கல் ஶரணமடைவதே உசிதமென்று நிச்சயித்து அப்படிப்பட்ட திவ்யதேசத்தெம்பெருமானை ஆராய்ந்தவிடத்தில் 'தெள்ளியார்பலர் கைதொழும் தேவனார்'

என்கிறபடியே நித்யஸூரிகளைப்போலே ஸர்வஜ்ஞர்களாய் பகவதநுபவரஸிகர்களான பரமைகாந்திகளுடைய ஸம்ருத்தியாலும் 'காவேரீ விரஜாதோயம்' என்கிறபடியே விரஜையாகச் சொல்லப்பட்ட காவிரியின் ஸமீபத்திலிருக்கையாலும் ஆகந்துகனுக்கன்றிக்கே ரக்ஷணோன்முகனான ஸர்வேச்வரனுடைய நித்யஸாந்நித்யத்தினாலும் இது ஸ்ரீவைகுண்டத்திற்கு ஸமானமென்று நினைத்து, மயர்வறமதிநலமருளப் பெற்ற மஹாயோகிகளால் 'திருவிண்ணகர்' என்று கொண்டாடப்பட்ட திவ்யதேசத்தில் பொறுமையையே ப்ரதானமாகவுடைய பூமிப் பிராட்டியாரையே ப்ரதான மஹிஷியாகத் திருவுள்ளம்பற்றி தம்மை ஆச்ரயித்த ஸர்வ மநுஷ்யவிஷயத்திலும் கொள்ளமாளாவின்ப வெள்ளம் கோதில்தந்திடும் வள்ளல்தன்மையோடு விளங்குகையாலே தன்னொப்பாரில்லப்பன் (ஒப்பிலியப்பன்) என்று மயர்வறமதிநலமருளப்பெற்ற மஹாயோகிகளால் மகிழ்ந்து பாடப்பட்டவனாய் அர்ச்சாவதாரதசையிலும் கூட வ்யக்தமாக விளங்குகிறவகடிதகடனா ஸாமர்த்யத்தோடு பொறுமையின் வடிவமான பூமிப்பிராட்டியாருடைய இங்கிதபராதீனனாயிருக்கிற திருவிண்ணகரெம்பெருமானை நிறைவொன்றுமில்லாத நீசனாக இருந்த தம்மை விண்ணுளாரிலும் சீரியராகத் திருத்திப்பணிகொண்ட மஹோபகாரத்தினாலே தமக்கு தேனும்பாலும்கன்னலும் அமுதுமாகித்தித்திருக்கும் குடந்தைக்கிடந்தவாராவமுதத்தின் ஜகத்ரக்ஷணஜாகரூகமான ரூபாந்தரமாகவே நிச்சயித்து 'விண்ணகரம் மருவி நாளும் நின்றானைத் தண்குடந்தைக்கிடந்தமாலை' என்று தாம் அநுஸந்தித்தபடியே க்ரந்தாரம்பத்தில் 'குடந்தையே தொழுது' என்றும் 'குடந்தையே தொழுமின்' என்றும் அருளிச்செய்தவாராவமுதனின் அவதாராந்தரமான திருவிண்ணகரத்தெம்பெருமான் திருவடிகளையே ஶரணமாக அடைந்தார்.

ஆக இதனால் ஸம்ஸாரமண்டலத்தில் மஹாபாதிகளான மனிதர்களுக்கு கீழேசொன்ன ஸ்ரீதேசிகனுடைய ஸ்ரீஸூக்திகளின்படியே க்ஷமாதிசயான பூமிப்பிராட்டியினுடைய புருஷகாரமே மேலானது என்கிற ஶாஸ்த்ரார்த்தம் அநுஷ்டானமுகத்தினால் உலகத்திற்குத் தெரிவிக்கப்பட்டது.

நாயிகாபாவம்

இப்படி இத்திருமங்கையாழ்வார் ஸாம்ஸாரிக ஸகலதுக்கநிவ்ருத்திபூர்வக-பரிபூர்ணப்ரஹ்மாநுபவபரீவாஹமான ஸகல நித்யகைங்கர்யபர்யந்தமான மோக்ஷப்ராப்தியைக்குறித்து ப்ரஹ்மாஸ்த்ரதுல்யமான பகவத்ஶரணாகதியை அநுஷ்டித்திருந்தும், இவ்வாழ்வார் பாசுரங்களையும் அநுஷ்டானத்தையும்கொண்டு உலகத்தை உஜ்ஜீவிப்பிக்கச்செய்வதாக ஸங்கல்பித்திருக்கிற ஸர்வேச்வரனுக்கு இவருடைய திவ்யப்ரபந்தங்கள் எல்லாம் சொல்லிமுடிந்தபிறகே இவருக்கு மோக்ஷம்கொடுப்பது இஷ்டமாகையினாலே அதற்குமுன்பு இவரபேக்ஷித்த மோக்ஷத்தைக்கொடுக்காமலிருக்க இவ்வாழ்வார் நித்யமுக்தர்களுடைய நித்யாநந்தாநுபவத்தை தாமர்த்தித்தபடி ஸர்வேச்வரன் உடனே கொடுத்தருளாமையாலே அத்யந்ததுக்கிதராய், பதிபாரார்த்ய பதிபாரதந்த்ர்ய பத்யேகபோகத்வாதிகள் ஸமானமாக இருக்கையாலே குணாதிகனாய் தன்னிடம் அளவிறந்த அன்புடையவனான பர்த்தாவைப்பிரிந்த ப்ரீதியுள்ள பதிவ்ரதையின் ஸ்வபாவத்தையடைந்தவராய் விரகவேதனையை ஸஹிக்கமுடியாமல் 'முன்னம் குறளுருவாய் மூவடிமண்கொண்டளந்த மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன் பொன்னங்கழிக்கானல் புள்ளினங்காள் புல்லாணி அன்னமாய் நூல்பயந்தார்க்காங்கிதனைச் செப்புமினே' என்று தூது விட்டார்.

'வில்லாலிலங்கை மலங்கச்சரம்துறந்த வல்லாளன்பின்போன நெஞ்சம்வருமளவும் எல்லாரும் என்றன்னையேசிலும் பேசிடினும் புல்லாணிஎம்பெருமான்பொய்கேட்டிருந்தேனே' என்று மனஸ்ஸங்க ஹ்ரீத்யாசாவஸ்தைகளை வெளியிட்டார்.

பின்பு-'பொன்னலரும் புன்னைசூழ் புல்லாணியம்மானை மின்னிடையார் வேட்கைநோய்கூரவிருந்தானை' என்றும் வெறுத்தார்.

இப்படி நாயிகாடாவத்தையடைந்து தூது விடவும் யோக்யதையில்லாமல் விரகவ்யாதியைப் பொறுக்கமுடியாமல் மூர்ச்சையையடைந்திருக்குமவஸ்தையை தாய்ச்சொல்லால்

'தாய்வாயில் சொற்கேளாள் தன்னாயத் தோடணையாள் தடமென்கொங்கையே ஆரச் சாந்தணியாள் எப்பெருமான் திருவரங்க மெங்கே என்றும் பேய்மாயமுலையுண்டிவ்வுல குண்டபெருவயிற்றன்பேசில் நங்காய் மாமாய னென்மகளைச்செய்தனகள் மங்கைமீர் மதிக் கிலேனே' 'பூண்முலைமேல் சாந்தணியாள் பொருகயல்கண் மை எழுதாள் பூவைபேணாள் எணறியாள் எத்தனையும் எப்பெருமான் திரு வரங்கம் எங்கே என்றும் நாண்மலராள் நாயக னாய் நாமறியவாய்ப்பாடி வளர்ந்த நம்பி ஆண் மகனாய் என் மகளைச்செய்தனகள் அம்மனை மீர் அறிகிலேனே' என்று அருளிச்செய்தார்.

பிறகு மூர்ச்சை தெளிந்தவாறே 'திருத் தாய் செம்போத்தே திருமாமகள் தன் கண வன் மருத்தார் தொல்புகழ் மாதவனை வர' வென்று நாயிகாபாவத்தோடு பக்ஷிகளைக் கொண்டு நாயகனைக் கூப்பிடச்சொன்னார்.

பிறகு 'குன்றமொன்றெடுத்தேந்திமாமழை அன்றுகாத்தவம்மான் அரக்கரைவென்ற வில் லியார் வீரமேகொலோ தென்றல்வந்து தீவீசு மென்செய்கேன்' என்று விரகாவஸ்தையில் தென்றல் சந்திரிகைகளினால் நோவுபட்டார்.

மடலெடுத்தல்

திருமங்கையாழ்வார் ஸம்ஸாரத்திலுண் டான ஸகல துக்கநிவ்ருத்திபூர்வகமான பரி பூர்ணப்ரஹ்மாநந்தாநுபவரூபமான மோக்ஷ ப்ராப்தியில் ஆஸ்தையினாலே ப்ரஹ்மாஸ்த்ர துல்யையான ஶரணாகதியை அநுஷ்டித்தும் நாயிகா பாவத்தை அடைந்து தூதுவிடுகிற வ்யாஜத்தினாலே பல பகவத்பக்தர்மூலமாக ப்ரார்த்தித்தும் இவரபேக்ஷித்தபோதே இவ ரைக்கொண்டு லோகோஜ்ஜீவநத்தை செய்விக்க வேணுமென்று நினைத்திருக்கிற ஸர்வேச்வரன் இவரபேக்ஷித்த மோக்ஷத்தைக் கொடுக்காததி னாலே அத்யந்ததுக்கிதராய் அப்பேரின் பத்தை தேஹம்போனபிறகு சாச்வத மாகக் கொடுக்கவேண்டுமென்றிருந்தாலும், அர்ஜுனாதிகளுக்கு தம்முடைய விச்வரூபாநு பவத்தை இவ்வுலகத்திலேயே சிறிதுகாலம் கொடுத்தாப்போலே தமக்கும் இவ்வுலகத்தி லேயே அப்பேரின்பத்தின் அநுபவத்தைச் சிறிதுகாலமாகிலும் கொடுக்கலாகாதோ என்று ஆசையின் மிகுதியினாலே நாயிகாபாவத்தை யடைந்து ப்ரார்த்திக்க அப்பொழுதும் அவன் அதைக்கொடாமையாலே இனி ஸ்வரூபவிருத் தமான கார்யத்தை அநுஷ்டித்தாவது அவனை இஷ்டப்படி அநுபவிக்கவேணுமென்று நிச்ச யித்து மடலெடுத்து அநுபவிக்க ப்ரவர்த்தித் தார். அப்படி மடலெடுப்பதை தமிழர்கள் ஸம்ப்ரதாயத்தில் அங்கீகரிக்காவிட்டாலும் முற் காலத்திலிருந்த பல ஸ்த்ரீகள் அதை அநுஷ் டித்ததாக வடமொழி ஶாஸ்த்ரங்களில் கூறப் படுவதை ப்ரமாணமாகக் காட்டித் தானும் அவ்வழியில் செய்து தமது மனோரதத்தைப் பூர்ணமாக்கிக்கொள்ளுகிறேன் என்கிறார். அப் படி மடலெடுத்ததிலும் க்ருஷ்ணாவதாரவிஷ யத்தில் அதை முதலில் ஸங்க்ரஹமாக அநுஷ் டித்தது சிறியமடல். அதிலும் தமது மனோ ரதம் பெருமையாலே அதை அர்ச்சாவதார விஷயத்தில் விஸ்தாரமாக வநுஷ்டித்தது பெரியதிருமடல் எனப்படுகிறது. மற்றொரு ஆழ்வார் இப்படி மடலெடுக்காததினாலும் இதில் சொல்லப்படுகிற விஷயவைலக்ஷண்யத் திற்கு ஸமானமான மற்றொரு ஸூக்தி காணப்படாமையினாலும் இவ்வாழ்வாருடைய பக்திமஹிமை அதிதரஸாதாரணமாகிறது.

காயிக கைங்கர்யம்

மற்றையாழ்வார்கள் தங்களுடைய பகவதநு பவத்தின் பரீவாஹமாகச் சிற்சில பாடல்ரூப மான வாசிககைங்கர்யத்தைமாத்திரம் பண் ணிப் போந்தார்கள். திருமங்கையாழ்வாரோ வென்னில்: மற்றையாழ்வார்களைக்காட்டிலும் அதிகமாக வாசிககைங்கர்யமான செவிக்கினிய செஞ்சொற்களைப் பாடினதோடு பகவதவ தாரங்களுக்குள் ப்ரதானங்களான தசாவதா ரப் பெருமாள்களுடைய திருப்ரதிஷ்டையை யும் கோயிலையும் நிர்மாணம்செய்வித்து அந்த தசாவதாரவிஷயகமான பாசுரங்களையும் ததநு பவபரீவாஹமாகப்பாடிவைத்தது மல்லாமல் ஆகல்பஸ்தாயியான திருமதிள்களுடைய நிர் மாணத்தையும் ஸ்ரீகோபுரமண்டபாதிகளையும் ஸ்ரீ ரங்கநாதன் விஷயத்தில் செய்தருளினார்.

ஸ்ரீ:

கார்முகம் வெற்றிதந்த விதம்

ஸகலலோகங்களையும் படைத்துண்டுமிழ்ந்தளந்த பரமபுருஷன் தனது பெருமைக்கு ஓர் அடையாளமாகவும், ஆயுதங்களின் சோபைக்காகவும், பஞ்சாயுதங்களைத் தரித்து விளங்குகிறான். அப்படிப்பட்ட பஞ்சாயுதங்கள், அருளார் திருச்சக்கரமும், மாதவனார் வதனத்தமுதுண்ணும்வலம்புரியாகிய ஸ்ரீபாஞ்சசன்னியமும், அண்டத்தின் அமைதியைக் காக்கும் திருத்தண்டமும் கறையிருளைநீக்கும் உறையிட்டவாளாகிய நந்தகமும், ஒண்சார்ங்கமாகியவில்லுமாகும். இவ்வைந்து ஆயுதங்களும் பக்தர்களுக்கு ரக்ஷணத்தையும் பகவானுக்கு அலங்காரத்தையும், ஜயத்தையும் கொடுக்குமியல்புடையவையாகும்.

இவைகளில் ஸ்ரீசார்ங்கமொழிந்த மற்றைத் திவ்யாயுதங்களால் பகவான் அனேக தடவைகளில் தமது வெற்றியை விளங்கவைத்திருந்த போதிலும், முக்கியமாக ஸ்ரீசார்ங்கத்தினால் பகவான் தமது வெற்றியை உலகத்திற்குக் காண்பித்தருளியது ஸ்ரீராமாவதாரத்திலேயாகும். மேலும் ஸ்ரீசார்ங்கத்தை ஸ்ரீமந்நாராயணன் கையாண்டு அருளியதும் ஸ்ரீராமாவதாரத்திலேயே என்றாலும் அது மிகையாகாது. இனி ஸ்ரீராமபிரான் தமது அவதார பிரயோஜனமாகிய காரியத்தில் தாம் ஜயமடைவதற்காகப் புரிந்த முன்னணியான காரியமும், அப்போது முக்கிய ஆயுதமாயிருந்த ஸ்ரீசார்ங்கம் அக்காரியத்தில் உபயோகப்படுத்தப்பட்ட விதத்தையும் சிறிது ஆராய்வோம்.

ஸ்ரீமத்ராமாவதாரத்தில், ஸ்வாமி மேன்மையில் குறைவில்லாத இக்ஷ்வாகுவம்சத்தில் திருவயோத்தியில் திருவவதாரம் செய்த போதிலும் ஸ்வாமியினுடைய அவதாரப் பிரயோஜனமாகிய சரணாகத ஸம்ரக்ஷணம், துஷ்டநிக்ரஹம் முதலியவைகள் அனேகமாக எல்லாம் அயோத்திக்குப் புறம்பேயும், காட்டிலும் நடந்தேறவேண்டியவைகளாயிருப்பதை ஸ்வாமி தம் திருவுள்ளத்தில் நினைத்தார். முன்னமேயே பாற்கடலில் தேவர்களும், முனிவர்களும் தம்மை வேண்டியபடியே ராக்ஷஸ நிரஸனமும், சரணாகத ஸம்ரக்ஷணமும் நடைபெறவே தாம் அவதரித்திருந்தபோதிலும் அதற்காகத் தாமே ராஜ்யத்தையும் பட்டத்தையும் விட்டுக் காட்டுக்குச்செல்வது தம்மால் மேற்கொள்ளப்பட்ட மனுஷ்ய தர்மத்திற்கு விரோதமாகும். ராக்ஷஸநிரஸனம் செய்ய வேண்டுமென்று எண்ணும் ரிஷிகளும் ஸ்வாமியை காட்டில் கண்டு பிரார்த்தித்தார்களே தவிர, அயோத்திக்குச்சென்று பிரார்த்திக்கவில்லை. ஸ்வாமியின் பாலியத்தில் விசுவாமித்திரர் யஜ்ஞரக்ஷணார்த்தமாகப் பிரார்த்தித்ததும் ஸீதாகல்யாணத்தில் உள்கருத்தாகக் கொண்டதல்லவா? தவிர ஏதோ வியாஜத்தினால் காட்டிற்குச்சென்று பிறகு ரிஷிகளின் கோரிக்கைகளையும் நிறைவேற்றலாம் என்றாலும், அதற்காகத் தாமே காட்டிற்குச்செல்வது தமக்கு ராஜ்யாபிஷேகம்செய்யக்காத்துக் கொண்டிருக்கும் பிதாவாகிய சக்ரவர்த்தி, குருவாகிய வஸிஷ்டர், தமதுமாதாவாகியோர், முதலியோருடைய மனோபீஷ்டத்திற்கும் விரோதமும், அதர்மமுமாகும். தமக்கும் அது க்ஷத்திரியதர்மத்திற்கும் விரோதமாகும். ஆதலால் தர்மவிரோதமில்லாமல் தர்மரக்ஷணம்செய்யும்படித் தாம் காட்டிற்குச் செல்ல ஓர் செய்கை வெளிப்படவேண்டும். தர்மம் நிலைபெறுவதற்கு அதர்மம் முன்னால் வெளிப்பட்டுக் காரியம் நிகழ்த்துவதுபோலவே, தாம் தர்மரக்ஷணம்செய்யத் தமக்குத் துணையாக ஏற்கும் செய்கை அநீதியாகவிருப்பினும் இருக்கட்டும் என நினைத்தார் ஸ்வாமி. அவ்வநீதியால் தமக்கும், தாம் ஏற்றுக்கொண்ட திவ்யாயுதமாகிய வில்லுக்கும் வெற்றி கிடைக்கவேண்டும். இது எப்படி நடக்கும்? என்று இவ்வண்ணம் ராமபிரான் திருவுள்ளத்தில் நினைத்துக்கொண்டிருக்கும்போது கைகேயியின் செவிலியாகிய மந்தரையென்னும் பெயருடைய கூனி ஸ்வாமியின் கண்ணுக்கு இலக்கானாள். மனிதசரீரத்தின் இயல்புக்கு மாறுபட்டு மிகவும் விகாரமாகத் தோன்றும் அவ

ளது கூனலைக்கண்டார். அக்கூனல் இனி நேராக ஆக்கமுடியாதமுரடானநிலையையடைந் திருப்பதையும், அதற்கனுகுணமான அவளது வயோதிகத்தன்மையையும் நோக்கினர். அய லாரைத் தன்னிஷ்டப்படி நடக்கச்செய்யும் வாக்குவன்மையும் அவளிடம் பொருந்தியிருத் தலையும் நினைத்தார். உடனே மிகவும் ஆச் சரியமானதும் அபூர்வமானதுமான யோசனை ஒன்று உதடமாயிற்று. அதாவது: இப்படிப் பட்ட நேராக ஆக்கமுடியாத கடுங்கூனல் இவ ளது உள்ளத்தில் தோன்றினல், இந்த மங் தையின் மனம் நியாயவழிக்குப் புறம்பே செல்லக்கூடும். அது தமக்கு மிகவும் உப யோகமாகவிருக்குமென்பது தான் அந்த யோசனை. உடனே விளையாட்டாக வில்லை வளைத்து உருண்டைகளைவைத்து அவளுடைய கூனின்மேல் எறிந்தார். ஸ்வாமி ராமபிரான் எய்தால் அது துரும்பாகவிருப்பினும், அம் பாகவிருப்பினும் உருண்டையாகவிருப்பினும் ஒன்றேயல்லவா? அது நினைத்தபலனைக் கொடுத்தேவிட்டது. கூனி தன் மனத்தில் கோணல்எண்ணங்கொண்டு கைகேயியைக்கலைத் தாள். கைகேயி ஸாஹஸம்புரிந்தாள். தச ரதர் சத்தியத்திற்குக் கட்டுப்பட்டார். ராம பிரான்வனம்சென்றார். தர்மத்திற்குயாதொரு விரோதமுமின்றி ஸ்ரீராமபிரானும் தான்செய் யநினைத்த சேவகங்களைச் செவ்வையாகச் செய் தருளினர். இவ்விதம் கூனியின் கூனலை அகத்தில் புகும்படி எய்த ராமபிரான் வெற்றி பெற்றார். அவருடைய வில்லும் வெற்றி பெற்றது. கூனலை உள்ளே செலுத்துவதி லும் வெற்றி; செலுத்தியதினலும் பிறகு வெற்றி.

இந்தச்செய்தியை அறுசமயம் புகுந்து பார்த்துத் தெளிந்த; பரமபதநாதனின் பரம பக்தராகிய திருமழிசைப்பிரான் அநுபவித் துப்பாடுகிறர். அச்செய்யுள் வருமாறு—

'வானகமும் மண்ணகமும் வெற்புமேழ்கடல் களும்
போனகம் செய்தாலிலைத்துயின்ற புண்டரீகனே!
தேனகம்செய்தண்ணறுமலர்த்துழாய் நன்மாலை யாய்
கூனகம் புகத்தெறித்த கோற்றவில்லியல்லையே!'
—[திருச்சந்தவிருத்தம்-30]

இப்பாசுரத்தின்கடைசி அடிதான் இப் போது நாம் கண்ட கருத்துக்களைக்கொண்டது.

இப்பாசுரத்தில்; மேலுலகங்களும் அதை யடைந்தபொருள்களும், பூலோகமும் அதன் கண்ணுள்ள அனைத்தும், ஸப்தகுலபர்வதங் களும், ஸப்தஸாகரங்களும் அடையத்தான் பிரளயகாலத்தில் விழுங்கி ஓர் குழந்தைவடி வுடன் ஓராலிலையில்துயில்கொண்டருளிய பரம புருஷனே! தேன்பெருகிவிளங்குவதும், வண்டு கள் ஸ்திரமாக வஸிப்பதுமான சீதளமான புதிய அழகான மனேஹரமான திருத்துழாய் மாலையையணிந்தவனே! நீ, கூனை மனத்தே போகும்படி எய்த வெற்றியையுடைய வில்லைத் தரித்தவனல்லவா! என்று பாடுகிறர் ஆழ் வார். யாவருடைய மனோவாக்குக்காயங்களுக்கு மெட்டாத ஸர்வேச்வரன் மனிததர்மத்திற்கு மாறுபடாமல் தான் அவதரித்தகாலத்தும், தமது அதிமாநுஷச்செயல்களைக் காட்டாமல் காட்டுவது என்கிற லீலையும் அதைஉள்ளபடி யறிந்த ஆழ்வாரின் அத்தியாச்சர்யமான திரு வுள்ள நிலையும், தெவிட்டாத கவியமுதமும் இப்பாசுரத்தில்விளங்குவது வித்வான்களுடை யவும் ஆஸ்திகர்களுடையவும் ஆராய்ச்சிக்கும் ஆநந்தத்திற்கும் உரியதாகும்.

ஸ்ரீ:

உபயவேதாந்த ஐககண்ட்யம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

உள்ளமுறைசெயல்கள் உள் ஒடுங்குவதை இவ்விரண்டுபாசுரங்களிலும் பாடுவதில் ‘வாங் மநஸி ஸம்பத்யதே மந: ப்ராணே’ என்கிற ச்ருதிகளையும், அவற்றை ஆதாரமாகக்கொண்ட 2-ம் பாதத்தின் முதல் நான்கு அதிகரணங்களையும் 6-வது அதிகரணத்தையும் ஸூசிப்பதாகக் கொள்ளலாம். ஆக்கைவிடும்பொழுது உள்ளே அந்தர்யாமியான ஹார்த்தாநுக்ரஹத்தால் ஹ்ருதயத்தில் அத்புதமான ப்ரகாசமேற்பட்டு 101-நாடிகளில் நடுவிலுள்ள ஸுஷும்நா நாடியில் நுழையப்பெற்று அதின் வழியாக வெளிக்கிளம்பி பகவானால் பரமபதம் சேர்க்க நியமிக்கப்பட்டிருக்கும் ஆதிவாஹிகர் அர்ச்சிராதிகணச்சேர்க்கையுடன் தத்ருப்பரமபதநயநம் தொடங்குவதை 2-ம் பாதத்தின் 8-வது ‘ததோகோக்ரஜ்வலநாதிகரணமும்’, ‘யோ மி ந: ப்ருதிஷ்யதே ஸயெதே ஸாதெதெவெதெ’ என்கிற கடைசி ஸூத்ரத்தையும், ‘ஆக்கை விடும்பொழுது எண்ணே’ எண்ணிக்கொண்டேயிரு என்பதால் ஸூசிக்கிறார். 3-வது பாதத்தில் கூறப்பட்டிருக்கும் அர்ச்சிராதிகதிக்ரமத்தையும் சிந்தித்துக்கொண்டே இரு என்பதையுமுபதேசிக்கிறார். ‘ஸுஹ்ருதே நாராயணஸ்ம்ருதி:’ என்று பரீக்ஷித்திற்கு 2-ம் ஸ்கந்தத்தில் தன் உபதேசத்தொடக்கத்திலேயே கூறுவதையும், பின்பு நடுவில் 6-ம் ஸ்கந்தத்தில் அஜாமிளோபாக்யாநத்தில் நாராயணனென்னும் நாமமாத்ரத்தை பகவானை எண்ணாமலுச்சரித்தாலும் நற்கதி கிடைப்பதைக் கூறுவதையும் நினைவூட்டி, அடுத்த பாசுரத்தில் நாராயணநாமத்தையும் அதையுடைய எட்டெழுத்து மந்த்ரத்தின் ப்ரபாவத்தையும் பொருளையும் பாடுவதற்கும் ‘ஆக்கை விடும்பொழுது எண்ணே’ என்பது அவதாரிகையாகிறது. ‘ஸுஹ்ருதே நாராயண ஸ்ம்ருதி:’ என்பதற்கு ஆக்கைவிடும்பொழுது நாராயணனை எண் என்பது பொருள். ஆக்கை விடும்பொழுது எண்ணவேண்டியது நாராயணன் என்று சுகருபதேசம். ‘ஸஜ்ஞாவோ-ந்நாவக்ஷவாக’ என்று ரத்னாவளியின் இந்தப் பாசுரஸங்க்ரஹத்தால் கர்மங்களால்வந்த ஜ்ஞாந ஸங்கோசத்திலிருந்து ‘க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி’ என்றபடி ஸர்வகர்மக்ஷயாநுக்ரஹத்தால் ஜ்ஞாநஸங்கோசங்களை அடியோடு நீக்கி பூர்ணஜ்ஞாநாவிர்பாவத்தைத் தந்து முக்தனாக்குவது காட்டப்படுகிறது.

10-ம் பாட்டு,

எண்பெருக்கந்நலத்தொண்பொருளீறில
வண்புகழ்நாரணன் திண்கழல் சேரே.
[திரு-1-2-10]

இப்பாட்டில் எட்டெழுத்தான திருவஷ்டாக்ஷரமந்த்ரத்தின் பொருளும் நாராயண ஶப்தத்தின் பொருளும் உரைக்கப்படுகிறதென்று ப்ரஸித்தம். பகவத்பஜநத்திற்கு ஆலம்பநமான மந்த்ரமும் அதனுடைய அர்த்தாநுஸந்தாநத்திற்காக அதன்பொருளும் உரைக்கப்படுகிறதென்று ஈடு. நீட்டிய த்ரிமாத்ரமான ஓங்காரத்தையே ஆலம்பநமாகக்கொண்டு யாவதாயுஷம் பகவத்பஜநம்செய்வதை ப்ரச்நோபநிஷத்து விதித்தது. திருமந்த்ரம் மிக்கஇன்பந்தரும் பஜநஆலம்பநமாகும். ஓங்காரமும் அதிலடங்கியது. ‘திருமந்த்ரத்திலே பிறந்து த்வயத்திலே வளர்ந்து’ என்பர். ஜீவாத்மாக்களுக்கு ஜ்ஞாநப்பிறப்புதான் ஸ்வரூபஹிதமான பிறப்பாகும். சேஷத்வமென்னுமுயிர்நிலையையுடைய ஜீவாத்மாவுக்கு திருமந்த்ரத்தின் மூன்றுபதங்களின் அநுஸந்தாநமும் ஜ்ஞாநஜந்மத்தைத்தரும். 3-பதங்களும் சேஷத்வஸ்வரூபத்தைத் தெளிவிப்பதாக யோஜனைகள் காட்டப்பட்டுள. திருநாரணன் கழல்களையே ஶரணாகப்பற்றி சேருவதையநுஸந்திக்கும் த்வயம் ஆத்மாவை ஸந்தோஷத்தோடுவளர்க்கும் போச்யமென்பர். ஸ்வஸ்வரூபத்தையும் ஆநந்தமான ஈச்வரஸ்வரூபத்தையும் நித்யபோக்யமாகச்செய்யும் மோக்ஷஇன்பத்தைத்தருவது த்வயம். ‘ஸக்ரு

துச்சாரணமாத்ரத்தாலே பரமபுருஷார்த்த ஹேதுவாய்க்கொண்டு ஸதாநுஸந்தானத்தாலே க்ருதார்த்தனுக்குகையாலே த்வயம் போக்யம்' என்று ஸ்ரீமத்ரஹஸ்யத்ரயஸாரம். பக்தி யோகத்தை உபதேசிக்கையில் எட்டையும் இரண்டையும் சேர்த்து ஸர்வகாலமும் இன் பாநுஸந்தானம் செய்யவேண்டியதை 'திண் கழல்சேர்' என்று த்வயத்தையும் ஸூசிப்ப தால் விளக்குகிறார். 'த்வயத்தினர்த்தத்தை நம்மாழ்வாரும் 'திருநாரணன் தாள் காலம் பெறச் சிந்தித்துய்ம்மினே' என்பதில் அருளிச் செய்தார்' என்று ரஹஸ்யத்ரயஸாரம். 'பத் துடையடியவர்க்கெளியவன்' என்று அடுத்த திருவாய்மொழித் தொடக்கத்தில் இவ் வெட்டு இரண்டுகளின் அநுஸந்தாநம் பக்தி யோகமாகுமென்பதை பக்தியோகாநுபவப்ரா ரம்பத்தில் ஸூசிக்கிறார். சாரீரகத்தின் விளக்கம் இவ்விரண்டு திருவாய்மொழிகளிலும் முடிந்ததும் 'இப்பத்தே' என்று இங்கு உபதேசிக்கப்பட்ட பக்தியோகத்தையும் ஸூசித்து 'பத்துடை' என்று இங்கு சாரீரக க்ரமமாக உபதேசிக்கப்பட்டபக்தியோகாநுபவ ப்ரகாரத்தை தம் அநுபவப்படி பரமபதம் செல்லும் பர்யந்தம் மேலே திருவாய்மொழி முழுவதும் பாடுகிறார். 'சேர்' என்பதற்கு, 'ஆச்ரயி' 'கடுகஸ்வீகரி' என்று ஈடு உரைத்த பொருள். சரமச்லோகம் நாரணன் திண் கழலை ஶரணமாகச்சேருவதை உபதேசித்து, அப்படிப்பற்றும் கழல் நழுவவிடாத அச்யுத மான திண்கழலேயாகும். பற்றியதும் ஸர்வ பாபங்களிலிருந்தும் விடுவித்து திண்கழலைச் சேர்ப்பிக்கிறேன்; துயரப்படாதே; அஞ்சல் அஞ்சல் என்று அபயமளிப்பதால் த்ருட மான மஹாவிச்வாஸத்தைத் தந்து ப்ரயாண காலம்வரையில் கலங்காத அச்சமின்மையை நிலைநிற்கச்செய்து உயிரான மஹாவிச்வாஸத் தைப் போஷணம்செய்து ஆத்மாவுக்கு இங் குள்ளநாள் போஷகமாகும். 'ஸத்ருமேயம் கீர்த்தி விஜயே ஸாம்பராயிகஸ்ய பந்தா' என்று டகவதாச்ரிதஜனங்களுக்கு விச்வாஸபோஷ ணம்செய்யும் வாயெயமென்றுகூறப்பட்டது. பரமபதம்சேருவதற்குத்தொடங்கி ப்ரயாண காலம்முழுவதும் அதாவது— சேரவேண்டிய வீட்டைச் சேருமளவில் விச்வாஸமெனும் உயிர்போன்ற அவச்யமான அங்கத்தைப் போஷித்து வளர்த்துவருவது. ப்ரயாணத்தை நடத்திவைக்கும் வண்டிக்காரர் ப்ரயாண காலத்தில் உண்டு தரிப்பதற்கு கட்டுச்சாதம் கட்டிப்போவதில் நிபுணராய் இருப்பரென்றும் ரஸம். 'நாராணன் திண்கழல்சேரே' என்று இங்கே பாடுவது சரமச்லோகத்தையும் பணிப் பதாகும். ஸாக்ஷாத்நாராயணனே வண்துவரா பதிமன்னனாக அவதரித்து தேர்த்தட்டில் நின்று 'ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்' என்று ஈச்வரன் ஸர்வாந்தர்யாமியாய் உலகத்தை நடத்திவருவதைப் பாடி 'தமேவ ஶரணம் கச்ச' 'அவனையே ஸர்வமுமென்று பூர்ணமான பாவத்தோடு கழல்பற்றிச்சரணமடை. அவ னுடைய ப்ரஸாதத்தால் பரமசாந்தியென்னும் சாச்வதமோக்ஷஸ்தாநத்தைப்பெறுவா'யென்று ஶாஸ்த்ரம்முடியும்சமயத்தில் கூறி, ரஹஸ்யத் திலும் ரஹஸ்யதரமான ஜ்ஞாநத்தை உபதே சித்ததாகச் சொல்லி, மேலும் பரமரஹஸ் யத்தை மறுபடியும் சொல்லுகிறேன் என்று சொல்லி 'ஸர்வதர்மாந் பரித்யஜ்ய மாமேகம் ஶரணம் வ்ரஜ' என்று ஸாக்ஷாத் நாராயணனென்னுமீச் வரனேயாயிருக்கும் என்னையே ஶரணம்பற்று என்று கூறி அபயமளித்ததால் 'நாரணன் திண்கழல்சேரே' என்று சொன்னதாகும். இப்படி ரஹஸ்யத்ரயங்களையுமிங்கே முடிவில் அவச்யோபாதேயமாக ஸூசிக்கிறார். தைத் திரீய ஜந்மாதிலக்ஷணவாக்யத்தில் 'யதோ வா இமாநி பூதாநி ஜாயந்தே' என்பதால் ப்ரஹ்மஜ்ஞாநத்தை அளிப்பதால் மோக்ஷ யோக்யமான ஜ்ஞாநப்பிறப்பையளிப்பதையும், அப்படிப்பிறந்தவருக்கு 'யேந ஜாதாநி ஜீவந்தி' என்று அவனுடைய இன்பநினைப்பி னாலேயே 'ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி' என்றபடி இன்பவெள்ளத்தின் நிரந்தரப் பெருக்கோடு வாழ்நாள்முழுவதும் பேரின்ப மாய் நடக்கும்படி செய்வதையும், 'யத் ப்ரயந்த்யபிஸம்விஶந்தி' என்று சரீரபாதகாலத்தில் தேஹத்தை விட்டு ப்ரஹ்மநாடிவழியாய்க் கிளம்பி ப்ரயாணம்செய்து அவனுக்குள் அவ னருளால் ப்ரவேசிக்கப்பெற்று பிரிவற்ற தனி மையற்ற அவிபாகமென்னும் சாச்வத இன்பச்

சேர்த்தியைத்த நவதையும், ப்ரஹ்மமும், ஶாரீரகஶாஸ்த்ரமும், அதனாலேற்படும் ப்ரஹ்மஜ்ஞானமும், அதன் நித்யப்பயிற்சியும், தருமென்பதை இந்த லக்ஷணவாக்யம் பொருள் கொள்ளுமென்பதை முன்பே காட்டியுள்ளோம். அந்யாத்மஜ்ஞானஸம்பத்தி முதலியதைத் தேடுவதில் திருமந்த்ரம் ஜ்ஞானப்பிறப்பைத்தந்து, த்வயம் ஸந்தத அநுஸந்தானத்தால் நித்யமாக இன்புற்றவாழ்வைத்தந்து, சரமச்லோகம் அபயப்ரதானம்செய்து மஹாவிச்வாஸத்தைத்தந்து அதைச் சலிக்கவொட்டாமல் நிலைநிறுத்தி பயமேயில்லாமல் வரப்போகும் திருநாளை ஆவலுடன் க்ருதக்ருத்யனாய் ப்ரதீக்ஷித்துக்கொண்டிருக்கும்படிக்கும், அவனையே ஶரணமாக ஆச்ரயமாகப்பற்றி அவனிடத்திலேயே ஶரணமென்னும் வாஸக்ருஹம்போல் நீங்காமல் நித்யவாஸம்செய்யும்படிக்கும், தேஹம் நீங்கினதும் யாதொரு ப்ரதிபந்தகங்களுமில்லாமல் பிரிவின்றி அவனுக்குள்ளே நித்யவாஸத்தைத் தேடும்படி தெளிவிக்கும். ஸர்வபாபங்களிலிருந்தும் மோக்ஷம் ஸித்திப்பது அந்தலயகாலத்தில்தான். 'ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி' என்பது சரீரபாதமென்னும் ப்ரயாணகாலத்தில் ஸித்திக்கும். நாராயணஶப்தப்ரவ்ருத்தி நிமித்தமும் இங்கே காட்டப்படுகிறதென்றும், ப்ரஹ்மானந்தஸமமான எண்ணுக்கதீதமான ஆனந்தத்தைப்பெற்று பூர்ணமான ஜ்ஞானவொளிவிகாஸத்தைப்பெற யோக்யரும் பெற்றவருமான ஒண்பொருள்களான ஜீவஸமூஹங்களுக்கும் வண்புகழென்னும் உலகப்புகழும் கல்யாணகுணங்களுக்கும் ஆச்ரயன் என்பது நாராயணஶப்தத்தின் ப்ரவ்ருத்தி நிமித்தமென்று இங்கே கூறப்படுவதாக ஒன்பதினாயிரப்படி. பக்தி என்னும் ப்ரஹ்மவித்யையில் முழுவதிலும் உபாஸிக்கவேண்டிய பரதத்வம் நாராயணனென்பதை ஸூத்ரகாரர் 3-மத்யாயம் 3-ம் பாதத்தில் லிங்கபூயஸ்த்வாதிகரணத்தில் தீர்மானம்செய்திருப்பதை இங்கே ஆழ்வார் எடுத்துக்காட்டுகிறார். 'சுபே நாராயணஸூக்தி:' என்றபடி நாராயணஸ்மரணத்தோடு ஶாரீரகஶாஸ்த்ரவிளக்கத்தை முடிக்கத் திருவுள்ளம்பற்றி ஶாஸ்த்ரமுடிவில் பரதேவதாநிர்ணயத்தோடு உபஸம்ஹாரம் செய்கிறார். திருவாய்மொழி முதல்பாசுரத்தில் பகவானை விசேஷணமாகவும் அவன் கழலை விசேஷ்யமாகவும் கூறி அவன் சுடரடி தொழுவதை உபாயமாகக்காட்டியதுபோல இங்கே ஶாஸ்த்ரவிளக்கமுடிவிலும் ஸகலவிபூதிகல்யாணகுணவிசிஷ்டனான நாரணனை விசேஷணமாகவும் கூறி, அவன் திருவடியை 'சேர்' என்று உபாஸிப்பதற்கும் அடைவதற்கும் பொருந்தும்படி இங்கே பாடுவது ரஸிக்கத்தக்கது. நாராயணஶப்தமும் ப்ராபகத்வத்தையும் ப்ராப்யத்வத்தையும் ஸமாஸபேதத்தால் சொல்லுமென்பது ப்ரஸித்தம். அந்த ஶப்தத்தின்பெருமைக்கேற்றபடி ப்ராபகத்வ ப்ராப்யத்வமாகிய இரண்டையும் குறிக்கும்படி க்ரியாபதம் ப்ரயோகிப்பதும் ரஸிக்கத்தக்கது.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதார வைபவம்

சிங்கப்பிரான் ஈடுமெடுப்புமிலீசன்
*ஆடுமரவில் துயிலரங்கேசன் அருமகற்கா
நீடுந்தறியில் உதித்திலனேல் நிகிலப்பொருள்கள்
ஊடும் புறத்தினும் உண்மை எவ்வாறிவ்
வுலகறியும் (1)
ஈடுமெடுப்புமில்லா வொருதெய்வ மிவனெனவே.

[இதன் பொருள்] படமெடுத்தாடுகின்ற திருவனந்தாழ்வான்மேல் யோகநித்ரை செய்தருள்கின்ற ஸ்ரீரங்கநாதன், பெறுதற்கரிய புத்ரனாகிய ப்ரஹ்லாதாழ்வானுக்காக நீண்ட ஸ்தம்பத்தினின்று அவதாரம் செய்திராவிட்டால், நிஸ்ஸமாப்யதிகனான எம்பெருமானிவனே யென்று எல்லாரும் நிச்சயிக்கும்படி எல்லா வஸ்துக்களின் உள்ளும் புறமும் இவ்வெம்பெருமான் (ஸர்வவ்யாபியாக) இருக்கும்

* இதுமுதல் நான்கு பாசுரங்கள் ஸ்ரீ ந்ருஸிம்ஹாவதார வைபவத்தைக் குறித்துத் திவ்யகவி பிள்ளைபெருமாளையங்கார் திருவரங்கத்துமாலையிற் கூறியுள்ளவை.

தன்மையை இந்த உலகம் எப்படி யறியும்? (அறியாதன்றோ?)

[விசேட உரை] மேற்படி பாசுரத்தினின்று அருமையான சில விஷயங்கள் க்ரஹிக்கத்தக்கவை. அவையாவன —

1. ஹிரண்யன் தட்டின தூணையன்றி, வேறொரு தூணிலிருந்து நரசிங்கமூர்த்தி தோன்றினால், 'முன்னமே ஒரு நரசிங்கத்தை உள்ளேவைத்து நாட்டிய தூண் அது' என்று அவன் சங்கிக்கக்கூடும். ஆதலால் அதற்கிடமில்லாதபடி அந்த ஹிரண்யன் தானே தனது உயரம் பருமனுக்கு உரியபடி பார்த்து அளந்து நாட்டின அவன் வாயில்தூணிலிருந்தே எம்பெருமான் ஸ்ரீந்ருஸிம்ஹரூபியாய்த் திருவவதரித்தான்.

2. ஹிரண்யனன்றி வேறு யாரேனும் கையால் தூணைத்தட்ட, அத்தட்டிய இடத்திலிருந்து தோன்றினால், 'அவர் தம் கையில் நரசிங்கத்தை அடக்கிக்கொண்டுவந்து தூணிலே புகுத்தினர்' என்று அவன் சொல்லக்கூடும். ஆதலால் அதற்கு இடமில்லாதபடி அந்த ஹிரண்யன் தானே தன்கையால் தட்டியவளவில் எம்பெருமான் ஸ்ரீந்ருஸிம்ஹரூபியாய்த் தோன்றினன்.

3. ஹிரண்யன் ஓரிடத்தில் தட்ட, மற்றோரிடத்திலிருந்து நரசிங்கம்தோன்றினால் 'எங்குமுளன்' என்று ப்ரஹ்லாதன் செய்த ப்ரதிஜ்ஞை தவறி, 'இங்கில்லை' என்று ஹிரண்யன் செய்த ப்ரதிஜ்ஞை நிலைநிற்கும். ஆதலால் அதற்கு இடமில்லாதபடி அவன் தட்டின இடத்திலிருந்தே எம்பெருமான் ஸ்ரீந்ருஸிம்ஹரூபியாய்த் தோன்றினன்.

4. அவன் தட்டின பின்பு சிறிது நேரங்கழித்து நரசிங்கம் தோன்றினால், 'நான் தட்டினபொழுது நீ சொன்ன ஹரி அங்கில்லை' என்று அவன் சொல்லி, எம்பெருமான் எங்கும் எப்பொழுதும் எல்லாப்பொருள்களிலும் உள்ளும் புறமும் வ்யாபித்திருக்கின்ற உண்மை நிலையை மறுப்பான். ஆதலால் அதற்கிடமில்லாதபடி, அத்தூணிலிருந்து கர்ப்பம், கருமுதிர்தல், ப்ரஸவம், குழந்தையாய்ப்பிறத்தல், அது நாளடைவில் வளர்தல் என்பன இல்லாமல், ஹிரண்யாஸுரனைக் காட்டிலும் பருத்து வளர்ந்த வடிவையுடையவனாய் அங்கு அப்போதே தோன்றினான்.

['மூலையானதும் இல்லை கர்ப்பக்குழியுமில்லை
மூளைத்தாயே ஒரு தூணில்
மலைவா யுலகத்தோர் பிறந்தான் பிறந்தா
னென்பர்
வாய்க்குண்டோ என் வார்த்தை
வீணில்'

என்று ஸ்ரீசக்ரவர்த்தித் திருமகனைக் குறித்துக் கவந்தன் கூறிய துதிக்கவி ஒருசார் இங்குப் பொருந்தும்.]

5. அப்படித் தோன்றினபோது, ஹிரண்யன் வெல்லவும் நரசிங்கன் தோற்கவுமானால், 'எங்குமுளன்' என்ற உண்மை நிலைத்தாலும், பரத்வம் ஸித்தியாமல் போய்விடுதல்பற்றி அந்த மஹாபாபியைத் தவறாமல் ஸம்ஹாரம் பண்ணினான்.

6. தேவர் மனிதர் விலங்கு ஸ்தாவரம் என்னும் நால்வகைப் பிறப்புக்களில் உள்ளவற்றில் ஒவ்வொன்றினாலும் தனித்தனிசாகாதபடியும், ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கு உட்பட்ட எந்த ப்ராணியினாலும் சாகாதபடியும் அவன் ப்ரஹ்மருத்ராதிகளிடம் வேண்டிப்பெற்ற பெருவரம் பழுதுபடாதிருத்தல் வேண்டி நரங்கலந்த சிங்கமாய்த் தோன்றினான்.

7. அஸ்த்ர ஶஸ்த்ரங்களில் ஒன்றினாலும் இறவாதபடியும், ஈரமுள்ளதனாலும் ஈரமில்லாததனாலும் இறவாதபடியும் பெற்றவரம் பழுதுபடாதபடி அவனை நார் கிழிப்பாரதுபோல நகங்களால் நன்றாகக் கிழித்துக்கொன்றான்.

8. பகலிலும் இரவிலும் சாகாதபடி பெற்ற வரம் பொய்படாதவாறு அப்பகலிரவுகளின் ஸந்தியாகிய மாலைப்பொழுதிற் கொன்றான்.

9. பூமியிலும் வானத்திலும் சாகாதபடி பெற்ற வரத்தை ஒதுக்குமாறு, தன் மடிமீது வைத்துக் கொன்றான்.

10. வீட்டின் அகத்திலும் புறத்திலும் இறவாதபடி பெற்றவரத்திற்கு விரோதமின்றி வாயிற்படிமீது வைத்துக்கொன்றான்.

['கொடியணி சிகரிவாய்ந்த கோமணிச்சபையின் வாயில்
படிமிசை யிருந்து கொண்டப் பதகனைத்

தொடையின்மீது
துடிதுடித் திடக்கி டத்தித் தூயவைந்நுதி சேர் கோர
வடிவமை நகாயு தத்தால் மார்பினைப் பிளந் ததம்மா!'
'மார்பினைப் பிளந்த சிங்கம் மணிக்குடர் மாலை சூடிச்
சோர்தரும் உதிரவாரி துனிவிளர் தூிஞ்சி மெய்யில்
ஆர்தரும் உயிரை யற்றை அந்திப்போ தருந்தி யார்த்தே
ஏர்தரு வெறுங்கோ தாக்கி யெறிந்ததவ் வசுரன் மெய்யை'
[மத்ஸ்யபுராணம், 18-ஆவது இரணியகசிபு வத அத்யாயம்–9, 10]
என்னும் செய்யுட்கள் மேற்கூறிய விஷயங்களை வலியுறுத்தும்.]

இத்தகைய நுணுக்கமான அவதார ரஹஸ்யங்கள் ஈண்டு கருதத்தக்க விஷயங்கள். ஸர்வ வ்யாபியானபரம்பொருள் ஸ்ரீமந்நாராயணனே என்ற உண்மை இத்திருவவதாரத்தின் செயல்களால் நன்கு விளங்குமென்பதும், ஸர்வேச்வரன் ஒருவன் உண்டென்பதும், அவன் ஸ்ரீமந்நாராயணனே யென்பதும் மேற்கூறிய பிள்ளைப்பெருமாளையங்கார் பாசுரத்தால் வெளியாகும் விஷயங்கள்.

இப்பாசுரத்தில் அருமகன்—என்றது, தந்தைக்கு மைந்தனிடம் இயல்பாயமைந்துள்ள அன்பு விசேஷத்தைக்காட்டும். அன்றி, 'எங்குமுளன் கண்ணன்' என்ற பரமார்த்தத்தை எளிதில்வெளியிட்ட மஹோபகாரனை புதல்வன் என்ற பொருளில் 'அருமகன்' என்று ப்ரயோகித்ததாகவும் கொள்ளலாம். பெற்ற தகப்பன் ப்ரஹ்லாதனைப் பகவந்நாமம் சொன்னதுகாரணமாகவே அவனைக் கைவிட்டிருக்க, எம்பெருமானுக்கு அந்த ப்ரஹ்லாதன்பக்கல் உண்டான புத்ரவாத்ஸல்யமும், பகவந்நாமம் சொன்னவர்களைத் தமக்கு எல்லா வகை உறவினராகவும் கொள்ளுகின்ற தமது இயல்புபற்றி 'அருமகன்' என்றார் என்னலாம். தாய்வயிற்றிலிருக்கும்போதே தொடங்கித் தன் சித்தத்தை எம்பெருமான்பக்கல் வைத்த மஹாபாகவத சிரோமணியன்றோ அவன்?

ஈடுமெடுப்புமில்லா வொருதெய்வம்—என்ற சொற்றொடர் 'ஈடுமெடுப்புமிலீசன் மாடுவிடாதென் மனனே' 'ஒத்தார் மிக்காரை யிலையாய மாமாயா' என்ற திருவழுதிவளநாடர் அருளிச் செயல்களையும், 'தனக்குவமையில்லாதான்' என்ற செந்நாப்போதார் பணிப்பையும் ஞாபகமூட்டும்.

'நீயுலக முதல்வனெனு முறைமைசரி ராசனுனிகில வத்துவினு நிற்கும்
நிலைமைப்ரக லாதனல் முத்திதரவல்லனெனு
நீர்மை கண்டா கருணனல்
மாயைபுரி யினுமடி யவர்க்கெளிய னென்னும்வித
மழிசைமுனி வர னுனுநீ
மண்ணுலகு தன்னில்வெறி பண்ணினை யுனைத்தொழா
மன்பதைகள் பேய்க ளலவோ?'

என்னும் ஸ்ரீ வரதராஜப்பெருமாள் பஞ்சரத்நப்பாசுரம் முற்கூறியஐயங்கார்பாசுரத்தைஒருசார் அடியொற்றியது காண்க. [இப்பாசுரத்தின் பொருள்:—அருளாளனே! பெருந்தேவி மணவாளனே! நீ ஸகலாண்டநாதன் என்பதைக் கஜேந்த்ராழ்வானும் எல்லா வஸ்துக்களின் உள்ளும் புறமும் ஸாவவயாபியாயிருக்கும்தன்மையைப்ரஹ்லாதாழ்வானும், முத்தி மழைபொழியும் முகில்வண்ணன் என்பதைக் கண்டாகர்ணனும், பலவிதமாயைகளைப் புரியும் ஆச்சர்யகுணசேஷ்டிதனயினும் பத்துடையடியவர்க்கெளியவன் என்பதை திருமழிசைப்பிரானும் இந்நிலவுலகத்தில் வெளியிட்டருளினே. இத்தகைய கல்யாணகுணங்கள் நிரம்பிய உன்னைத் தொழாத மானிடர் மானிடரல்லர்; பேய்களன்றோ?] என்றபடி.

மாலோலன் மறைமுதலியவற்றை
மீண்டும் பிறப்பித்தமை

மறந்த மறையும் மழுங்கிய மந்திரமும் மகமும்
இறந்த தெய்வங்களு மெல்லாம் முன் எங் குறைந் தேங்கியன்ற?
அறந்தருங் கோயி லரங்கன் அவ்வாளரிக் காளரி யாய்ப்
பிறந்தபின் அன்றோ பிறந்து பெருகிப் பிறங்கியதே. (2)

[இதன் பொருள்] மறக்கப்பட்ட வேதங்களும், விளங்காமற்போன மந்த்ரங்களும்,

யாகங்களும், ஒழிந்துபோன தெய்வங்களும், ஆகிய இவையெல்லாம் முன்பு (அதாவது ஹிரண்யன் வாழ்ந்தநாளில்) எங்குத்தங்கி எவ்விடத்தில் சஞ்சரித்தன? தர்மஸ்வரூபியான திருவரங்கம் பெரியகோயிலில் எழுந்தருளியிருப்பவனான எம்பெருமான் அந்தப் பராக்ரமத்தையுடைய பகைவனான ஹிரண்யனை ஸம்ஹரிப்பதற்காக நரஸிம்ஹரூபியாய்த் திருவவதரித்த பின்பன்றோ அவைகளெல்லாம் தோன்றிப் பெருகிவிளங்கின.

[விசேட உரை] ஹிரண்யன் தான் பிறந்து வளர்ந்து அருந்தவம்புரிந்து பெருவரங்கள் பெற்றுத் தலையெடுத்துச் செருக்கி, உலகத்தில் எவரும் பழைய க்ரமப்படி வேதமோதவும் மந்த்ரஜபங்கள் பண்ணவும் யாகங்கள் புரியவும் தெய்வங்களை வணங்கவும் கூடாவென்றும், தன்னையே தெய்வமாகக்கொண்டு யாவரும் வணங்கிவழிபடவேண்டுமென்றும் கட்டளையிட்டான். அவ்வாணை தவறாமல் செலுத்தப்பட்டுவருங்காலத்தில், வேதம் முதலிய யாவும் இருக்கின்ற இடமும் தெரியாதபடி மறைந்திருந்தன. இப்படிச் சிலகாலம்கழிந்த பின்னர் எம்பெருமான் நரஸிம்ஹாவதாரம் செய்து ஹிரண்யனைத் தொலைக்க, மறந்த வேதமும் மந்த்ரஜபங்களும் யாகங்களும் மற்றும் தெய்வங்களும் தலையெடுத்தோங்கின வென்பது இச்செய்யுளிற்கூறப்பட்ட விஷயம். இதனால் துஷ்டநிக்ரஹம்செய்து வேதங்களையும் வைதிககர்மங்களையும் நிலைநிறுத்தி ஸகல தேவர்களையும் வாழ்விப்பவன் ஸ்ரீ நரசிங்கப் பெருமான் என்ற உண்மை உணர்த்தினார் கவி.

மறந்த மறை—அத்யயநமில்லாமையால் மறந்துபோன வேதங்கள். இறந்த தெய்வங்கள் பிழைத்திருத்தல் தெரியாமையால் இறந்த தெய்வங்கள் என்றார். ஆள் அரி-ஆண்மையுடைய பகைவன். (அரி-பகைவன்) ஆள் அரி—நரங்கலந்த சிங்கம். இது ஹரி என்ற வடமொழியின் விகாரம். யானை முதலிய பெரிய பிராணிகளையும் அழிக்கவல்லது என்று காரணப்பொருள்படும். 'அந்தியம்போதி லரியுருவாகி யரியை யழித்தவனை' என்பதை நோக்கி 'ஆளரிக்கு ஆளரியாய்' என்றார்.

'ஹிரண்யன் அநேக வரங்களைப் பெற்றுக் கர்விதனாகி, த்ரிலோகங்களையும் ஸ்வாதீநமாக்கிக்கொண்டு, இந்த்ரன், ஸூர்யன், வாயு, அக்நி, வருணன், சந்த்ரன், யமன் முதலானோர் செய்கிற அதிகாரங்களைத் தானே செய்துகொண்டு, யாகங்களினாலே அவர்களுக்கான ஹவிர்ப்பாகங்களைத் தானே கைக்கொண்டு மூன்று லோகங்களையும் ஏகாதிகாரமாய்த் தானே ஆண்டுகொண்டிருந்தான். அப்போது இந்த்ராதி தேவதைகள் அந்த மஹாசுரனுக்குப் பயந்து ஸ்வர்க்கலோகத்தைவிட்டு மனிதவேஷம்பூண்டு பூமியில் ஸஞ்சரித்துக்கொண்டிருந்தார்கள்'* என்ற ஸ்ரீவிஷ்ணுபுராண வசநப்படி ஹிரண்யன் வாழ்ந்தநாளில் மறையும் மந்திரமும் மகமும் தெய்வங்களும் மழுங்கிப் போயின. ஸ்ரீந்ருஸிம்ஹன் அவதாரம்செய்த பிறகே அவ்வேதம் முதலியவை விளங்கலா

---

*இவ்விஷயத்தைப் பின்வரும் மத்ஸ்யபுராணச் செய்யுட்களால் அறியலாம். ஹிரண்யகசிபு ப்ரஹ்மதேவரைக் கேட்டுக்கொண்ட பயங்கரமான வரங்கள்:—

1. பஞ்சபூ தங்க ளாலும் படியிற்பல் உயிர்க ளாலும்
விஞ்சுகைப் படைக ளாலும் விண்ணவர் சித்த ராலும்
அஞ்சுறும் இடிக ளாலும் மாதிரத் தலைவ ராலும்
எஞ்சலில் கதிர்க ளாலும் இயக்கர்கிம் புருட ராலும்.
2. சங்குசக் கரம்வாள் தண்டு சார்ங்கமோர் ஐந்தும் தாங்கித்
துங்கமார் கருட னூர்ந்து துளவமால் அமர்செய் போதும்
செங்கண்மால் விடைகள் தாவித் தீமலி சூலம் தாங்கிப்
புங்கவில் எடுத்து முக்கண் புராரிபோர் புரியும்போதும்.
3. இறந்திடா திருக்க வேண்டும் இறைவர் இமையோ ராதி
அறந்தவர் முனிவர் சாபம் அணுகிடா திருக்க வேண்டும்
கறங்கெனச் சுழலும் போரில் கைப்படை எடுத்தோர் யாரும்

யின என்பது தெளிவு.

நரசிங்கமூர்த்தி கொண்ட விசுவரூபம்

அடிகண்டிலர் அதலத்தவர் ஐம்முகனே டமரர்
கடிகண்டிலர் மலைவான் இவர்ந்தும் கமலத்தய
னர்
முடிகண்டிலர் அண்டமா முகடேறியும் மூது
ணர்ந்தோர்
படிகண்டிலர் அரங்கேசர்கோள் சிங்கப்படி
தனக்கே. 3

[இதன் பொருள்] ஸ்ரீரங்கநாதன் கொண்ட நரசிங்க உருவத்திற்கு, கீழுலகத்திலுள்ளவர்கள் திருவடிகளைக் கண்டாரில்லை; ஐந்துமுகங்களையுடைய சிவனும் மற்றைத்தேவர்களும் முறையே கைலாஸகிரியிலும் ஸ்வர்க்கலோகத்திலும்ஆகிய உயர்ந்தஇடத்திலிருந்தும் திருவரையை(இடையை)க் கண்டாரில்லை, திருமாலின் உந்திக்கமலத்தினின்றும் தோன்றிய ப்ரஹ்மதேவர் மேலேழுலகங்களுக்கும் மேலதானஸத்யலோகத்திலிருந்தும் திருமுடியைக் கண்டாரில்லை; பிரமனது ஆதிஸ்ருஷ்டியில் உண்டானவர்களும் தத்வஜ்ஞாநமுடையவர்களுமான ஸநகாதியோகிகளும் அவன் கொண்ட திருவுருவத்தின் அளவைக் கண்டாரில்லை.

[விசேட வுரை]

'பிளந்தது தூணு மாங்கே பிறந்தது சீயம்
பின்னை
வளர்ந்தது திசைக ளெட்டும் பகிரண்ட முதல
மற்றும்
அளந்ததப் புறத்துச்செய்கை யாரறிந் தறைய
கிற்பார்
கிளர்ந்தது ககன முட்டை கிழிந்தது கீழும்
மேலும்'

'மன்றலந் துளப மாலை மாலுடை மடங்கல்
வானில்
சென்றது தெரிதல் தேற்றும் சேவடி படியில்
தீண்ட
நின்றதோர் பொழுதி னண்ட நெடுமுகட்
டிருந்த முன்னோன்
அன்றவ னுந்தி வந்தா னெனத் தோன்றி
னனல்'

'நோக்கினர் நோக்கி னர்முன் நோக்குறு முக
மும் கையும்
யாக்கையும் தாளு மாகி யெங்கணும் தானே
யாகி
வாக்கினல் மனத்தி னல்மற் றறிவினல் அளக்க
வாரா
மேக்குயர் சீயந் தன்னைக் கண்டனர் வெருவு
கின்றார்'

என்ற கம்பராமாயணத்து இரணியன் வதைப் படலத்துப் பாசுரங்கள் இங்கு நோக்கத்தக்கவை. [விஸ்தர பயம் நோக்கி இச்செய்யுள்களுக்கு உரை கூறாமல் விடப்பட்டது]. ஐம்முகன்–சிவன் [நான்முகன் பிள்ளை ஐம்முகன்; ஐம்முகன்பிள்ளை அறுமுகன்] ஸதாசிவமூர்த்தியாகிய சிவபிரானுக்கு ஐந்து முகங்கள் உண்டு. ஈசாநம், தத்புருஷம், அகோரம், வாமம்,

---

புறங்கொடுத் தோட வேண்டும் புத்திசால் மகவும் வேண்டும்.

4. பகலிராப் படியில் வானில் பகருள்ளில் புறத்தில் பாணி
மிக நனைந் தவைகள் தம்மால் வெய்யவன் கதிரால் ஈரம்
உகவலர்ந் தவைகள் தம்மால் உயிரிறந் திடாமை வேண்டும்
புகழ்புய வலிமேம் பாடும் பொருந்துற வேண்டு மின்னும்.

5. படைக்கவும் படைத்துப் பின்னர்ப் பாதுகாத் திடவும் மீளத்
துடைக்கவும் வேண்டும் விண்மீண் சோமசூ ரியர்களாகக்
கடைக்கனல் வருணன் காலன் கருதிய நிருதி வாயு
விடைக்கொடி யவன்குபேரன் விபுதர்கோன் இவர்க ளாற்றும்.

6. செயலெலாம் புரிந்து யானே சிறந்திட வேண்டு மன்றிப்
பயமுறு குரோதம் காமம் பகர்மத மோக மற்றை
அயர்வில்மாச் சரியம் லோபம் அனைத்தும்யான் ஆக வேண்டும்
இயலுமிந் தியங்க ளெந்தும் என்செயல் ஆக வேண்டும்.

(பொருள் வெளிப்படை)

ஸத்யோஜாதம் என்று அவற்றிற்குப் பெயர் கூறுவர். அயன்—அஜன். அ—விஷ்ணு; திருமாலிடத்தினின்று தோன்றினவன்—என்று பொருள்படும்.

நரசிங்கப்பிரானுடைய நீள்சினம்
தணிந்தமை

அரியின் அரங்கர் முன்னாள் அரியாகிய வப்பொழுது
கோறியின் அவுணர்தம் வெள்ளங்கள் கோடியுங் கோன்றதிலோ
தறியின் வயிறின் தகுவன் நெஞ்சும் சரபத் துடலும்
நெறியின் வகிர்ந்தபின் அன்றோ தணிந்தது நீள் சினமே. 4

[இதன் பொருள்] ஆராய்ந்துபார்த்தால், ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீ நரசிங்கமூர்த்தியாக அவதரித்தகாலத்தில், ஆடுகள் போன்ற வெள்ளக்கணக்கான அஸுரர்களைக் கொன்றதனாலா அம்மூர்த்தியின் சினம் ஆறிற்று? (அவ்வளவினால் ஆறவில்லை.)(பின்னை எப்பொழுது அவன்சினம் ஆறிற்றென்றால்) தான் தோன்றிய தூணின் நடுவிடத்தைப் பிளந்தாற்போலவே அஸுரனை ஹிரண்யனது மார்பையும் சிவபிரானாகிய சரபத்தினது உடம்பையும் முறையே பிளந்தபின்பன்றோ அப் பிரானது மிகுந்த கோபம் தணிந்திட்டது.

[விசேட வுரை] நரசிங்கமூர்த்தி ஹிரண்யன் தட்டின தூணைப் பிளந்துகொண்டு அதிலிருந்து தோன்றினவுடனே, அவ்வஸுரனது ஸபையிலிருந்தவர்களும் அவனைச் சேர்ந்தவர்களுமான கோடிக்கணக்கான அஸுரர்களையெல்லாம் சொன்று அதன் பின்னர் ஹிரண்யனை வதைத்தான். அந்த ஹிரண்யவதத்துக்காகத் தேவர்களின் ப்ரார்த்தனைக் கிணங்கித் தோன்றிய அச் சிங்கப்பிரான் ஹிரண்யனை மார்புகீண்டு அழித்தபின்பும் கோபம் தணியாமல் உக்ரம் மேலிட்டிருந்தான். அவனது சடுஞ்சினத்தைக்கண்டு அஞ்சிய தேவர்கள் சிவபிரானிடம் ஓடிச் சரணமடைய, அவன் அவர்களுக்கு அடயமளித்து, மிகப் பெரியதொரு சரபவடிவங்கொண்டு ஆரவாரித்து நரசிங்கத்தை எதிர்த்துவர, நரசிங்கப்பெருமான் அச் சிவசரபத்தையும் ஹிரண்யனைப்போலவே சிந்நபிந்நப்படுத்தி அழித்து, பிறகு ப்ரஹ்லாதன் பணிந்து ப்ரார்த்தித்ததனாலும், தேவர்கள் துதித்ததனாலும், லக்ஷ்மீஸாந்நித்யத்தாலும் கோபம் தணிந்தான் என்பது இப்பாசுரத்தில் அறியவேண்டிய விஷயம்.

'வாழ்குமரன்மேல் கனகவஞ்சகன்மேல் ஓர் முகத்தே
சூழ்சருணையும் முனிவும் தோன்றியவால்—கேழ்கிளரும்
அங்கவேள்குன்ற வழல்சரபத் தைப்பிளந்த
சிங்கவேள் குன்றத்தி னார்க்கு'

[நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி—97]

'புக்க கருடனையோர் புன்மசகம் வென்றதிறம்
ஒக்கும் கனகன் உரங்கீண்ட—மிக்க திறல்
ஆளரியைப் பேரனுக்கா யஞ்சிக் கிடந்த சிவன்
கோள்விளைத்தான் என்னுங் குறி'

'பொன்ன னுரம் கீண்டதனல் பொங்குசின மாறிற்றோ
துன்னு சிவசரபம் சோரவுயிர்—அன்னதனைப்
பற்றி வகிர்ந்தபின்னர்ப் பாழி நாமடங்கல்
உற்ற சினம் தணிந்த தாங்கு'

[பாரப்ரஹ்மவிவேகம்]

'அச்செருத் தொடர்விடத் தழல்விழிச் சரபமங்
கெய்ச்சிரைத் திடவெடுத் தெற்றியெற் றிப்பெரு
வச்சிரத் துகிர்களால் மருவவங் கந்தொறும்
பச்சிரத் தம்படப் பரிபவம் பண்ணியே'

'ஈண்டுமா ளரிவெகுண் டிரணியன் தனதுடல்
கீண்டவா கீண்டுமெய் கிளர்கையா யிரமுறப்
பூண்டுசுற் றிப்பெரும் பொன்வரைப் புறனுறத்
தூண்டினான் என்புடன் தோலுமேவ ருசவே'

'சுரமுறிந் தேகுதிண் கால்முறிந் தெரிமுகச்
சிரமுறிந் திருவகைச் சிறைகளின் திறமுறிந்
தூரமுறிந் துடன்முறிந் துக்கதா லென்றுமுப்
புரமுறிந் தெரிபுகப் பொருதவன் சரபமே.'

[சரபஸம்ஹாரபரிச்சேதம்]

இம்மேற்கோள் பாசுரங்கள் இங்கறியத் தக்கன. 'யாதொரு நரசிங்கமூர்த்தியினுடைய கோபாக்நியிலே சிவனுருவமான சரபம் சலபமாயிற்றோ' என்பது அபியுக்தர் வசநம். [ஶலபம்—விட்டில், விளக்குப்பூச்சி] ஶரபம்

என்பது இரண்டு தலைகளையும் சிறகுகளையும் கூர்மையான நகமுள்ள எட்டுக்கால்களையும் மேல் நோக்கிய கண்களையுமுடைய ஒரு ம்ருக விசேஷம். இதனைப் பறவையென்பாருமுளர். இது சிங்கத்தை எளிதில் கொல்லவல்லது. நரசிங்கம் திவ்யசிங்கமாதலால் அது சரபத்தைக் கொன்றிட்டது.

இப்பாசுரத்தில் அரக்கர்களை ஆடுகளுக்கு உவமையாகக் கூறியது, நல்லன தீயன பகுத்துணராமை, ஒன்று போனவழியே எல்லாம் போதல், தமக்கு வரும் பெருந்தீங்கைக் கண்டு மகிழ்ந்திருத்தல் என்னும் இக் குணங்களை நோக்கி. (கொறி—ஆடு) தகுவன்—அஸுரன். சிங்கப்பிரானுக்கு, தறியின் (தூணின்) வயிறு, தகுவன் (அஸுரன்) நெஞ்சம், சரபத்துடல் இம் மூன்றையும் பிளப்பதில் வாசியில்லை என்பது போதரும். இப்பாசுரத்தில் எம்பெருமானது பரத்வம் வெளியிடப்பட்டது

ஸ்ரீ:

ஸ்ரீஸங்கல்பஸூர்யோதயம்

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

வேங்கடம்போன்ற கிரி, காசீ, காஞ்சீ, ஸ்ரீரங்கம் முதலிய நகரம், தீர்த்தம், ஆச்ரமம், தபோவநம் முதலிய ஸர்வதர்மக்ஷேத்ரங்களின் ஒருமித்த சேர்க்கையாவார் இப் புண்ய புருஷர். பகவத்ஸங்கல்பமாகிய எனது வரவை எதிர்பார்க்குமிவரை தாமதமன்னியில் உடனே நெருங்குவேன். அப்படிவேண்டாம். கொஞ்சம் மறைந்திருந்து இவருள்கருத்தை நன்கு தெரிந்துகொள்ளுகிறேன்.

(ச்ரத்தை எனும் பெண் கைகொடுத்துக் கொண்டு சாந்தி மதுரமான ஆக்ருதியோடு புருஷன் ப்ரவேசிக்கிறான்)

புருஷன்—(தன்னுடைய நிலையைப் பராமர்சித்து நிர்வேதத்தோடு) (நிர்வேதமென்பது சாந்திரஸத்தின் ஸ்தாயிபாவம்)

பாபக்காடுகளில் உல்லாஸமாய்த் திரிந்து வந்த என்னுடைய துக்கமயமான பிறவிகளின் தொடர்ச்சி ஒய்ந்துவிட்டது. அநாதிகாலமாய்த்தொடர்ந்துவந்தது அந்தமடைந்தது. இந்த ஜந்மத்திலும் முன்னிருந்த பாபக்குவியல்களால் சூழப்பட்டிருந்த நான் பகவானுடைய தயாதேவி கடாக்ஷவிஷயமாகி, பலத்திலாசையைத் துறந்த நிவ்ருத்திதர்மாநுஷ்டாநத்தில் இறக்கிவிடப்பட்டேன். விவேகருடைய போரால் மோஹம் எனும் சத்ரு போய்விட்டாலும் ப்ரியதமனான சேஷி, பதி பகவானை அடையாமலிருப்பதால் தவிக்கிறேன். (பெருமூச்சுவிட்டுக்கொண்டு)

> விரவஸிவிதஜெஹாஜ்வுயஶவிஷாநூஸவுஜு-
> த்வா, நியதிஃநூஹஸாஷுவா நிதுவெயா-
> ஷாயிதாதூ । ஊயஃஹஜிஹஃநுஜெவாத-
> வஜெவாதகூஃ கூதிகூதி ஜிவஹஸாநி க்ஷீண-
> ஶக்திஃ க்ஷிவெயமூ ॥

தேஹத்தோடு ஸஹவாஸச்சேர்க்கை பஹுகாலமாயுள்ளது. ஸ்தூலதேஹஸஹவாஸம் இந்த ஜந்மம்முதல். ஸூக்ஷ்மதேஹம் (எடு) பஹுகாலமாக பரிசயம். தேஹத்தைச்சேர்ந்த பந்துக்களும் சிரபரிசிதர். இதையெல்லாம் பற்றிய கவலை ஓய்வதில்லை. ஸ்வபாவத்தின் பலமிப்படி. 'ஷுஹாவஹூ ஹுவதஶதெ' என்று பகவான் பாடினர். இதனால் ஆத்மா ஊசலாடுவதுபோலிருக்கிறது. ஜ்ஞாநத்திறனி மின்மினிப்பூச்சியைப்போல் மந்தப்ரகாசம். அல்பசக்தியுடைய நான் இந்த இருள்தருமாஞாலத்தில் தேஹகாராக்ருஹத்தில் இன்னும் எத்தனைகாலம் போக்குவேன். 'கூவிக்கொள்ளும்காலம் குறுகாதோ'.

மேலும்—

> நஃஸூதொ நவ வஜொஜஹம் யயாவஹூா-
> ஜுயஶ வஸூஷா। கூவணஃ கிஂ கஷிஷுாஜி
> ந கூஷிஷுாஜி வா ஷுயமூ ॥

இது அஜ்ஞாநத் தூக்கதசையுமில்லை ஜ்ஞா

நாகந்தாநுபவமான விழிப்புதசையாயுமில்லை. 'ஸ்வாபாஶ்வாயவ்யதிகரணே' என்ற மத்ய மதசையாயிருக்கிறது. இதற்கேற்றபடி என்ன செய்கிறது, என்ன செய்யாமலிருக்கிறது என்ற இரண்டும் தெரியவில்லை. யதா ஸ்தாஸ – இனியாகப்போகிறபடி; நானிப் பொழுது முக்தனல்ல. யதா பூர்வா–இதற்கு முன் இருந்தபடி, ந ச ஸம்ஸாரீ அஹம்–நான் பத்தஸம்ஸாரியுமல்ல. க்ருபணஃ–நான் அகிஞ்ச னனும் அநந்யகதியுமான பேதை. (க்ருபணஃ) ஸ்வயம்–என் புத்தியால் என் சக்தியால் ஹித காரணமென்ன, அஹிதகாரணமென்னவென் பது அறிவது கஷ்டமாயிருக்கிறது. (உத்தர க்ருத்யாதிகாரத்திலும் அபராதபரிஹாராதி காரத்திலுமுள்ள விசாரங்களையும் நிர்ணயங் களையுமிங்கே நினைக்கவேணும்.)

எனக்கென்ன இதைப்பற்றிய சிந்தாபாரம் அநாதிகாலமாய் எல்லையற்ற கருணைக்கடலும், தடையற்ற ஸ்வாதந்த்ரியத்தை உடையவரு மான ப்ரபு ஒருவரே, நல்வழியில் என்னை நடத்தவும், தீவழியிலிருந்து விலக்குவதிலும் ப்ரமாணம். அவர் திருவுள்ளப்படி அவருக் கதீநமும், அவராலேயே ப்ரேரிக்கப்படும் புத்தி யையுடைய என்னை நடத்திவைக்கட்டும் என்ற தெளிவு எனக்கு வந்துவிட்டது.

(சற்று ஆலோசித்து நின்று)

ஸ்வமதிரிஹ ஹிதாஹிதோபதேஶப்ரதி-
ஹதஶக்திஃ ஶமிதவிபக்ஷஸமூஹ-
த்ருஶ்யமாநஹிராஶ்ரிதஃ। பரமபுரு-
ஷஸ்யாநஸ்ஸ தூர்ணமநோ வைபவ-
வைஃ பரிஹ்ருதமோஹாகாரகேஷ்வஃ ஸ-
த்யபத்மஸ்ய த்வயி ||

பகவானே கதி. 'தியோ யோ நஃ ப்ரசோ- தயாத்' என்றபடி அவரே என்னுடைய புத்தி ப்ரவ்ருத்திகளையெல்லாம் ப்ரேரணநியமநங்கள் செய்யட்டுமென்று அவருக்கே அதீநமாக இருக்கையில் புத்திபூர்வகமாக நான் இனி பாபம் செய்ய ப்ரஸக்தியேயில்லை. அமதிக மாய் தெரியாமல் அபராதங்களெத்தனை நேர்ந் தாலும் அவை பகவான் தயையால் என் னிடமொட்டாமல் உடனே விட்டு விடுகின்றன. விரோதிகளையெல்லாம் ஜயித் ததும் ஸத்வம் உச்சமாயிருப்பதுமான சமம் தமம் முதலிய குணங்கள் பகவத் க்ருபையால் என்னைவிட்டு நீங்காமலிருக்கின்றன. (அத னால் பாபபுத்திக்கும் பாபக்ரியைகளுக்குமிட மேயில்லை.) ஆனால் பொழுதுபோகவேணுமே.

'ந ஹி கஶ்சித் க்ஷணமபி ஜாது திஷ்டத்யக- ர்மக்ருத்। கார்யதே ஹ்யவஶஃ கர்ம ஸர்வஃ ப்ர- க்ருதிஜைர்குணைஃ ||' என்றபடி ப்ராக்ருதி ப்ராக்ருதகுணங்களால் ஏதாவது தேஹாதி வ்யாபாரங்களில் வ்யாப்ருதனாயிருந்துதானே காலத்தைக்கழிக்கவேணுமென்று கேட்டால், பரமேஷ்ட்யாநந்தா பூர்ணாகோ- வைகுண்டே— பரமபுருஷ-ஸர்வத்திற்கும் காரணமும் தனக்குமேற்பட்டபரமில்லாதது மான பகவானை. 'புருஷாந்ந பரம் கிஞ்சித் ஸா காஷ்டா ஸா பரா கதிஃ' என்ற பரமகாரணனை, பரமப்ராப்யனை த்யா நம், ஸ்தோத்ரம், நமஸ்காரம் முதலிய யஜ்ஞங் களால் பொழுதைப் பழுதாக்காமல் ப்ரஹ்ம நிஷ்டை வழியிலேயேநடத்தி ஸமயத்தை பகவத்ஸங்கல்போதயத்தை ஆவலுடன் எதிர் பார்த்திருப்பேன். 'நமோ ஸஸ்வஸ்ய ஸமஸ்தி- தஃ' 'யோகயஜ்ஞாஸ்ஸ்வயம் வரே' த்யாநமும் யாசம்.

ச்ரத்தை—ஸ்வாமி!. உண்மை தெரியாத பெண்ணுகையால் ஒன்று கேட்கிறேன். மிக்க ஸந்தோஷஸமயத்திலும் உம் மதியைப்பற்றிக் குறைவாக என் நினைக்கவேணும். மோக்ஷத் தின் ஸித்தி மிகவுமருகாமையிலுள்ளதல்லவோ!

புருஷன்—மோக்ஷப்பேறு ஸித்திப்பதா யிருப்பினும் தோஷங்கள் விடமுடியாமல் தொடரும் கொடுமை ஜ்ஞாநத்தைத் தகைக் கிறது.

ஸக்ருதபி விநதாநாம் ஸர்வதோ ஸர்வ-
தேஹிநாம் விநிஷ்ஷதியே ஹாமயே
வியேயே। விரதி ந க்ஷாவிஜேஹ.
தோ ஹா ஷுதோஜஹம் விஷயவிஷய
வித்தா தேஷாம் ஜ்யாஸா ||

உபநிஷதியே—புத்திக் கெட்டாத மிக தூரமான பரம்பொருளையும் தம் கருணை யால் நம் புத்திக்கெட்டும்படி ஸமீபத்திற்குக்

கொண்டுவருவதுபோலத் தெளிவாக விளக்கும், ஸாமயெயெ—நமக்கு பரமபாக்யமான பரம் பொருள், ஸவ—ஜெஹிநி—நாம் கோராமல் நாம் அறியாமல் எல்லோருடைய சரீரத்திற் குள்ளும் உள்ளுயிராய் நீங்காத ஸ்திரவாஸம் செய்துகொண்டு, ஸகூாஜவிநதாநாஜவி—ஒருக்கால் வணங்குகிறவர்களுக்கும், ஸவ—ஜெ—ளதையும் கொடுப்பதென்று, ஸவ—ஜா ஔம ஹிநி—எப்பொழுதும் ஆசையும் ப்ரயத்நமும் செய்துகொண்டு, விமெயெ—நம் விருப்பத் திற்கு அநுகூலமாகவிருந்தும். ஜோஹதஃ—அநாதிமோஹவலிமையால். விஷயவிஷாஜெ ஊ—ஊா—விஷமங்களான விஷயநினைவுகளால் பெருகும். ஜெ ஊஊாஸா—என்னுடைய அடங்கா ஆசை, ந க்ஷாவிஜ விரஜதி—ஒரு நொடிப் பொழுதும் நிற்பதில்லை, ஹா ஹதொzஹம்—ஐயோ நான் எத்தனை பாபி, கெட்டேன், கெட்டேன்.

ச்ரத்தை—தொலைந்துபோன பழைய நடப்பையே இப்பொழுதும் நினைவுக்கு இழுத்துக்கொண்டுவந்து துயரப்படுகிறீரே.

புருஷன்—அம்மா! ப்ராரப்தகர்மத்தால் இன்னும் என்னென்ன விளையுமோவென்று என் மனம் அச்சப்படுகிறது. அது கிடக்கட்டும். அதைப்பற்றி என் வீண் கவலை. ஓயாமல் பகவத்பஜநத்திலாழும் யோகத்தில் நிற்கும் நான் எப்பொழுதும் மிகவும் ஜாக்ரதையாயிருக்கவேணும்.

> ஜுத்யூஜெ்யுதி விஜாஷா யதூதவ்யும்
> ஹிதெஷிணா। தஜெவ நித்யும் கதவ்—
> வ்யஜநியஷாஸிதஜுத்யூநா ॥

இன்றைக்கு தேஹம்முடியுமென்று தெரிந்தவன் தன்ஆத்மாவின் ஹிதத்திற்காகஎப்படி நடக்கவேணுமோ, தன்முடிவு எப்பொழுதென்று நிச்சயமில்லாதவனும் எப்பொழுதும் இடைவிடாமல் அப்படியே நடக்கவேணும்.

ச்ரத்தை—ஆயினும் தேவரீர் தோஷங்களின் ஸம்பவத்தை சங்கிக்கக்கூடாது. இன்றோ, மற்றோர் நாளோ மோக்ஷம் கிடைத்தே தீருமென்று விச்வாஸத்துடன் நிம்மதியாகவேயிருக்கவேணும்.

புருஷன்—அம்மா!

> ‹ஷதஜிதஃ வ்யுத்ய ஜஹிஸஂஹாவிதாஷி
> ஊதி யஸ்ய ஸ்யாஜஊா நவிவிகிதா ஜஷி’

என் ஹ்ருதயத்திற்குள் உள்ளுயிராய் என்னை மோக்ஷம்சேர்த்துக் காக்கவேணுமென்று உறைந்து நித்யவாஸம்செய்யும் ப்ரஹ்மத்தைஇத்தேஹம் விழுந்ததும் அடைந்து புகுந்து கலந்து வாழ்வேன் என்ற உறுதியான விச்வாஸத்தோடு இருப்பேன். துளியேனுமிதில் ஸந்தேஹப்படேன். சாந்தோக்யோபநிஷத்தில் சாண்டில்யபகவான் வழிகாட்டி இருப்பதை நீ எனக்கு நினைவூட்டுவது யுக்தமே. (அந்த இடத்தில் ப்ரஹ்மஸூத்ரமும் உபநிஷத்தின் கருத்தை ‹நிவாயஷ்வாஜ’ ‹நீ கண்ணெடுத்துப்பார்’ என்றே உன்னுடைய சிறு புல்லிய ஹ்ருதயகுஹையில் உலகம் யாவையுமாக்கிக் காத்து உட்கொள்ளும் காரணப்ரஹ்மம் விடாமல் நித்யவாஸம்செய்கிறது’ என்று விளக்கியதை ‹ஸவ—ஜெ ஸவ—ஜெஹிநி’ என்று முன் ச்லோகத்தில் ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்கிறாரென்பதின்பொருத்தமிதனால் விளங்கும்.) நான் அச்சமற்று த்ருடவிச்வாஸத்தோடேயிருக்கிறேனென்றும் என் மன உறுதியை விஷ்ணுபக்திதேவியிடம்போய்ச்சொல்.

ச்ரத்தா—அப்படியே செய்கிறேன் (என்று சென்றாள்)

புருஷன்—இன்னும் வரவில்லையே. அப்பேறு என்று கொலோ.

> விதவ்யவடியதூாரொஹாவொஹ—
> வஸிஹூஜெஃ நிரயவஊவீயாதாயாத—
> கூஜெஷ்ூ நிரதெஜெஃ। ஜயிமதவஸி—
> ஹ்ராஞீ நாஜூாயஜெஜிவாஹ்யநஃஸஊ—
> வயதி நிஜஹூயாஜாயீ ஷ்யம் ஹஸிவநநஃ॥

கதிசிந்தநாதிகாரத்தின் முடிவிலுமிந்த ச்லோகம் வைக்கப்பட்டுள்ளது. இரண்டிடத்திலுமிது பொருந்துவதே. அங்கேபோல் இங்கும் பரிபூர்ணப்ரஹ்மாநுபவம் அடுத்தாற்போல் வரவிருக்கிறது. இங்கும் கதியை இவன் சிந்தநம்செய்துகொண்டு அதைப்பாரிப்பவன். ஸூத்ரகாரரும்கதிபாதமாகியமோக்ஷாத்யாயம்3-ப்பாதத்திற்குமுன் இரண்டாம்பாத முடிவில் ‹யொமிநஃ ப்ரதிஸ்யெதெ ஸ—தெவெதெ’ என்றஸூத்ரத்தால் பகவான் பக்தியோகஷட்கத்தில் 8-வது அத்யாயத்தின்

முடிவில் சாச்வதமென்று பாடிய இவ்விரண்டு சுதிகளையும் பக்திநிஷ்டருக்கு நினைத்துக் கொண்டேயிருக்கவேண்டியதாக பகவானால் கீதாஸ்ம்ருதியால் பாடப்பட்டதாக விளக்கினார். ‘ஸாதெ-ஃ ஸயெ-ஃதெ.’ விதூவயூ- தூமாதிமார்க்கம். ஏத்தச்சாலைப்போல் ஏறுவதுமிறங்குவதுமாயிருக்கும் கீழே (பூமிக்கு) வந்து கர்மங்களைச்செய்து புண்யமெனும் ஜலம் நிறைந்து மேலேபோய் அந்தப்புண்யச்சால் ஜலத்தைக் கொட்டிவிட்டு (சால் க்ஷீணமானதும்) கீழே பூமிக்கு மறுபடியும் வருகிறது. ‘நிரயவதவீ யாதாயாதகூ)ெஸெ—நரகம் செல்லும் வழிகளிலும் சுற்றி இழுக்கப்படுவதும், நிரஷவெரு:—ஓய்வில்லாமல், இளைப்பாறுவதற்கு இடமேயில்லாமல். ‘வயும்’ ‘வதவீ’ ‘சுதிமதவஸிஹாஞீநு’ என்பதால், ‘ஸஸாரவதவீம் வ)ஜநு ெஶாஹமூமு வ)யாதொzவஸ’ என்ற ச்லோகஸூசநம். இப்படித் திரிந்துவந்து களைத்த நம்மை, க்ஷஜூயெரு:சுதிவாஹ)-ப்ரக்ருதிமண்டலத்தைத் தாண்டுவிப்பதற்கென்றே தாம் திட்டம் செய்திருக்கும் நித்யஸூரி தேவகணங்களால் தாண்டுவித்து, ஹரிவநூ:—நம் தாபங்களையெல்லாம் அபஹரிக்கும் ஹரியெனும் சந்தன வ்ருக்ஷம் ஸ்வயம்—தாமே நேரில் (பிறரைக்கொண்டில்லாமல்) நிஜஹாயாதாயீ-தம்முடைய சீதளாநந்தஸ்வரூபச்சாயையே, (தம் நிரதிசய ஆநந்தத்தையே சாயைபோல இவனுக்கு ஸங்க்ராமிக்கச்செய்து) ஸவயதி—‘வஷெஹா)வாநுயாதி’ என்று ஆநந்தமயப்ரஹ்மவிஷயத்தில் இத்திரிகள் பாடியபடி மகிழ்விக்கிறார். ‘ஸ்வயம்’ ‘நிஜ’ என்று ‘வஷெஹா)வ’ என்கிற ச்ருதியும் ஸூசிக்கப்படுகிறது. ‘ஹாயா’ என்பது, நிழலையும், ப்ரதிபிம்பத்தையும் சொல்லும். அதிகரணஸாராவளியின் 544-வது ச்லோக சிந்தாமணி பதயோஜனைகள் நடஸபாபதி ஸப்யர்களுடைய ரஸஸாம்யந்யாயத்தையும் குறிப்பிட்டிருக்கின்றன. ‘சுநா க்ஷரெதஹஸ)வ’ என்கிற ஸூத்ரமும் கவனிக்கத்தக்கது. பகவதுதாராநுக்ரஹத்தால் பேரின்பமுழுவதும் ஸமமாக முக்தருக்கும் ப்ரதிபலிக்கிறது. உயிரின் இன்பமும்படியே உடல்போன்ற முக்தருக் முழுவதும் பரவுகிறது. ‘வநூ:’ என்பது குளிர்ச்சியையும் பரிமளத்தையும் குறிக்கும். ‘தம் ஬்ரஹ்மஙந்: ஹ்விஶதி’ என்று கௌஷீதகியையும் நினைக்கவேணும். ‘தம் ஬்ரஹ ரஸ: ஹ்விஶதி’ என்பதும் ப்ரஹ்மரஸமே இவனுக்கும் நிரம்புவதைக்காட்டுகிறது. ‘ரஸம் ஹ்யேவாயம் லப்த்வாநந்தீ பவதி’ என்பதும் நடஸபாபதிந்யாயத்தையுமநுக்ரஹிக்கும். ‘நிஜஹாயா’ என்பதற்கு, தன் ஸாம்யத்தை என்று ப்ரபாவிலாஸ உரை. நிரயவதவீ எனும் நரகமார்க்கத்தைப்பற்றிய அச்வமேதபர்வச்லோகங்களுமுதாஹரிக்கப்பட்டன. ‘விஶுத்திவாதவஹாயாஸ்ரெதெ கூது ஸவம் ஹவெக’’ என்ற விஷ்ணுபுராணவசநமும், ‘வாஸுதேவதருஹாயா’ என்ற ச்லோகமும் உதாஹரிக்கப்பட்டன.

ஸங்கல்பர்—(ஸந்தோஷத்துடன்) ஸ்வாமி திருவுள்ளத்திற்கேற்றபடி இவனுடைய பக்தி இருக்கிறதென்று நிச்சயமாகத் தெரிகிறது.

> ஶியூாதூஷிசுவெவிஃவெக ஶஷிதெ
> ரஸ்ஷயீ: கூஶெராதீணஃ: ஹ்தி-
> வஸஷொஷவிதவிஜொமஸ்ஹாகுதஃ -
> ஶாக । நியூாநவீரதவஃணஹ்திஸ-
> ஞிஶ்ரேயஸஶ்ரீரஸாவஹ்ஹத்ரவவதூஸி-
> ஹதி லவாகூஶிவாரவாரஸூரீமு ॥

ஶியூாதூஷிசுவெ: கூஶெ:—ப்ராந்திகளால்வந்த கசடுகளெல்லாம், (விவெகஶஷிதெ: விவேகராஜரால்நீக்கப்பட்டதால்) ஈஷயீ:—அணுகாமல், அவற்றின் ஸ்பர்சமேயில்லாதவனாய், ஹ்சிவஸஷொஷ-தோஷம் நிரம்பியவை என்று நன்றாக அறியப்பட்ட, விதவிஜொமஸ்ஹாகுதஃஶாக உதீயஃ—சித்போகமென்பது கேவல ஆத்மாநந்தமெனும் சிற்றின்பம். சித்தின் இன்பமும் சிற்றின்பமே என்ற ரஸம் ‘அளவில்லாச்சிற்றின்ப’மெனும் பாசுரத்தில் ஸூசிதம். அதுவும் சேறே. அதிலே விழுந்துவிட்டால் அதிலிருந்து வெளிக்கிளம்பமுடியாது. அதிலாசைவைத்து இறங்காமல், அதில்கால்வைக்காமலேயே தாண்டிவிடவேண்டும். அப்படியே அதனிடத்திலாசையிலும். ஆசையே சேறு.

(தொடரும்)

ஸ்ரீ:

திருப்பாவைக்கதை

(சென்ற ஸஞ்சிகையின் தொடர்ச்சி)

கறப்பவர்கள் மடியின் அருகில் போய் உட்காரும்போது பசுக்களின் வயிறு தமது தலையில் இடிக்குமோ என்ற சங்கையில்லாமல் வயிற்றின்கீழ் சுகமாக அமர்ந்திருப்பார்கள். பசுக்களின் மடிகள் ஔபாஸநாக்நிகுண்டம் போல் வெகு அழகானவை. அவற்றைப் பிடித்துப் பால் கறப்பதில் உத்ஸாஹங்கொண்ட கோபாலர்கள் மடியின்கீழ் சற்று உயரத்தில் குடத்தைவைத்துவிட்டுக் கறப்பதற்காக மடியைப் பற்றுவார்கள். அவ்வளவுதான்; உடனே அந்தக்குடம் நிறைந்துவிடும். அந்தக்குடத்தை எடுத்துத் தூரத்தில்வைத்துவிட்டு வேறு குடத்தை முன்போல் மடியின்கீழ் வைத்துக் கறப்பதற்காக மடியைத் தொடுவார்கள்; அந்த க்ஷணமே அந்தக்குடம் நிறைந்துவிடும், அதை அப்புறப்படுத்தி முன்போல் வேறு குடம் வைத்துக் கறப்பார்கள். மேல்மேலும் இப்படியே நடக்கும். இவ்வளவு ஔதார்யமுள்ள பசுக்களாகிய நமது செல்வம் எக்காலமும் இடைவிடாது நிறைந்திருக்கும்' என்று சொல்லி முடித்தாள்.

4 ஆழி.

இப்படி மழையையும் மாற்றுதே பால் சொரியும் வள்ளல் பெரும்பசுக்களையும்பற்றிப் பேசின அந்தப் பெண்ணின் மனம் எம்பெருமானையே நினைத்துக்கொண்டிருந்தது. அவனிடத்திலுள்ள ஔதார்யமேயன்றோ அவனது அருளாலுண்டான மேகங்களிடத்திலும் பசுக்களிடத்திலும் காணப்படுகிறது. மேகங்கள் தமது உருவத்தில் அவன்போலவே இருப்பவை. ஆகவே நீருண்டு இருண்ட மேகங்களும் அவைபோன்ற உருவமுள்ள எம்பெருமானும் அப்போது அவள் மனக்கண்முன் தோன்றிநின்றார்கள். அந்தக்ஷணத்தில் நிலா சிறிது மங்கி உடனே முன்போல் ப்ரகாசித்தது. இந்தப்பெண் நிமிர்ந்து ஆகாசத்தில் சந்திரனைப் பார்த்தாள். ஒரு மேகம் சந்திரனைக் கடந்து போய்க்கொண்டிருந்தது. தான் செய்யப்போகும் அநுக்ரஹத்திற்கு முன் அறிகுறியாக பகவானே அப்போது அங்கு அந்த மேகத்தை அனுப்பியதாக அவள் எண்ணினாள். பிறகு பகவானுடைய ஆஜ்ஞையினால் அப்போது அங்கு தன் கண்முன் தோன்றிய அந்த மேகத்தோடு பேசி அதை உபசரிக்கவேண்டியது தனது கடமையென்றும் அப்படிச்செய்யாமலிருந்தால் அது ஒருபெரும் அபசாரமாகுமென்றும் கருதினாள். அதைக்கொஞ்சம் உற்றுநோக்கினாள். 'நான் உனக்கு என்னசெய்யவேண்டும்' என்று அது கேட்பதுபோல் ஒரு தோற்றம் உண்டாயிற்று. உடனே அதை ஸம்போதனம்பண்ணி (விளித்து) அதனிடத்தில் தன் கோரிக்கையை அறிவித்தாள். 'ஆழிமழைக்கண்ணா' என்று அதைக் கூப்பிட்டாள். தத்வஜ்ஞர் நம்பிறந்தவர்களுக்கு எல்லா வஸ்துவும் கண்ணனேயாதலின் மேகத்தையும்இவள் 'கண்ணா!' என்று கூப்பிடுவது இவளுடைய ஸ்வபாவத்திற்கு ஏற்றதேயாம். ஆகிலும் ஸாக்ஷாத் கண்ணனைக்காட்டிலும் வேறுபாடு தோன்றுவதற்காக 'மழைக்கண்ணா' என்றாள். ஸாக்ஷாத் கண்ணன் அருள்பொழியும் கண்ணன். இது மழைபொழியும் கண்ணன். இந்த மழைக்கண்ணனுடைய ப்ரசம்ஸை தோன்றுவதற்காக 'ஆழி' என்று ஒன்றைச் சேர்த்தாள். ஆழி என்பது ஸமுத்ரம். மேகம் ஸமுத்ரத்தோடு ஸம்பந்தப்பட்டது. ஸமுத்ரஜலத்தையேயன்றோ முகந்து மேகம் மழையாகப்பொழிகின்றது. இப்படி ஸமுத்ரத்தோடு நெருங்கிய ஸம்பந்தமுள்ளதாதலின் அதன் குணங்களெல்லாம் மேகத்திற்கும் உண்டாயிருக்கும். கம்பீரமாயிருப்பது, உதாரத்தனம் முதலிய குணங்கள் ஸமுத்ரத்திற்கு ப்ரஸித்தமானவை. பிதாவினுடைய குணங்கள் புத்ரனுக்கு இருப்பது போல் அந்தக்குணங்களெல்லாம் உனக்கு அவச்யம் உண்டாயிருக்குமே. ஆகையால் நீ நான் விரும்புவதை அவச்யம் செய்துகொடுக்க வேண்டுமென்று இவ்விதமாகக் கருத்துக்கொண்டு 'ஆழிமழைக்கண்ணா' ஸமுத்ரமேகமே! ஸமுத்ரத்தைச்சேர்ந்த மேகமே! ஸமுத்ரத்தோடு ஸம்பந்தப்பட்ட மேகமே! என்று பஹுமானித்துக் கூப்பிட்டாள்.

இப்படித் தனது பக்தியும் ஆதரவும் தோற்றும்படி கூப்பிட்டு, 'நீ சிறிதும் வஞ்சனை

செய்யாமல், ஏமாற்றாமல், வேண்டிய அளவு மழை பெய்யவேண்டும்' என்று வேண்டினாள். எம்பெருமானுடைய திருமேனி நிறத்தைப் பெற்று நீலமேகச்யாமளன் என்று எம்பெருமானுடைய திருமேனிக்கு உபமானமாக நிர்த்தேசம் பண்ணுவதற்கேற்ற பாக்யமுள்ளதாயிருப்பதால் பக்தர்களுக்கெல்லாம் மேகத்தினிடத்தில் தனியே ஒரு பஹுமாநமும் விருப்பமுமுண்டு. ஆகையால் இந்த கோபகுமாரி 'வேண்டிய அளவு மழைபெய்யவேண்டும்' என்ற வெறும் ப்ரார்த்தனையைமட்டும் செய்து நிற்க மனமில்லாமல் ஆரம்பம்முதல் மேகத்தினுடைய ஒவ்வொரு நிலையையும் அநுபவித்துக் களித்து முடிவில் அந்த வேண்டுகோளைச் செய்கின்றாள். மழை பெய்வதற்குமுன் மேகம் ஸமுத்ரத்தில் புகுந்து அதன் நீரை முகந்துகொண்டு கர்ஜித்து ஆகாசத்தில் ஏறும். இந்த நிலைகளையெல்லாம் இவள் மனக்கண்ணால்கண்டு மகிழ்ந்துபேசுகின்றாள். ஸமுத்ரத்தின் நடுவில் ஜலத்தின்மேல் மேகம் அமர்கின்றது. 'ஸமுத்ரத்தின் குழந்தையோ இது அதன் மடியில் உட்கார்ந்திருக்கின்றது' என்ற தோற்றம் அப்போது உண்டாகின்றது. பிறகு நீரை இழுத்து க்ரஹித்துக்கொள்கின்றது. ஸமுத்ரத்தின் ஜலம் மனிதர்களுக்கு உபயோகப்படுவதில்லை. அதன் உவர்ப்பையெல்லாம் கழித்து சுத்தநீரைமட்டும் க்ரஹித்து உலகத்திற்கு மதுரமாகப் பொழிகின்றது. ஆஹா! என்ன தயை! என்ன ஔதார்யமென்று வியந்து கொண்டாடுகின்றாள். நீருண்ட பிறகு ஸமுத்ரத்திலிருந்து ஆகாசத்திற்குக் கிளம்புகின்றது. அப்போது சப்தம் உண்டாகின்றது. உலகத்திற்கு ப்ராணாதாரமான சுத்தஜலத்தை உதவும்படியான ஓர் அதிகாரத்தை நமக்குக் கொடுத்திருக்கின்றானே ஸர்வேச்வரன் என்ற ஸந்தோஷத்தினால் உண்டான ஆரவாரமோ அது? அல்லது ஸர்வேச்வரன் கஜேந்த்ராழ்வானை ரக்ஷிக்கப் புறப்படும்போதே 'பயப்படாதே பயப்படாதே' என்றதுபோல் உலகத்தாரைக் குறித்து 'பயப்படாதீர்கள் இதோ வந்துவிட்டேன் உங்களுடைய க்லேசமெல்லாம் தீரும்படி மழைபெய்ய' என்று அது கொடுக்கும் அபயவாக்கோ அது என்று உத்ப்ரேக்ஷித்து மகிழ்கின்றாள். மேகம் கீழிருந்து மேல்ஏறும் அழகையும் அநுபவிக்கின்றாள். 'முழங்கிப் புறப்பட்டுப் போதருமாபோலே' என்று இவ்விதமான ஒவ்வொரு நிலையையும் தந்மயமாய் அநுபவிக்கும் ஹ்ருதயபரிபாகமுடையவள் இவள்.

இனி ஆகாசத்தில் மேகாநுபவம். அந்த அநுபவரஸத்தை எம்பெருமானை உபமானமாக வைத்துப் பேசிக்காட்டுகின்றாள். நீர் நிரம்பிய மேகம் கன்னங்கரேலென்று தோற்றமுள்ளதாயிருக்கும். ஆகாசத்தில் தோன்றிய பிறகு மின்னும். பிறகு இடிக்கும். பிறகு சடசடவென்று பெய்யும். இந்த நான்கு நிலைகளையும் நான்கு உபமானங்களால் அழகு பெறச் செய்கின்றாள். நிறம் எம்பெருமானுடைய திருமேனி நிறம் போன்றது. மின்னல் எம்பெருமானுடைய திருக்கையில் ஜ்வலிக்கும் திருச்சக்கரத்தின் ஒளிபோன்றது. கர்ஜநம் சங்கத்வனிபோன்றது. (சங்கத்தின் பெருமையை ஆண்டாள் நாச்சியார்திருமொழியில் ஒரு தனித் திருமொழியால் அநுபவிக்கிறாள்.) மேகம்பெய்யும் ஜலமழை எம்பெருமானுடைய சார்ங்கமென்னும் வில்லிலிருந்து கிளம்பும் அம்புமழைபோன்றது. இதையெல்லாம் சேர்த்துப்பார்த்தால் நீருண்ட மேகம் ஆகாசத்தில் மின்னி இடித்து மழைபெய்வது தேவாஸுரயுத்தத்தில் எம்பெருமான் தேவர்கள் பக்ஷத்தில் நின்று ஜ்வலிக்கும் சக்கரத்தைக் கையிலேந்தி அவ்வப்பொழுது சங்கத்தைப் 'பம் பம்' என்று ஊதி இடைவிடாது வில்லைநாணேற்றி அசுரர்கள்மேல் இடைவிடாது சரமழை (அம்புமழை) பொழிவதுபோன்றது என்றதாகும். இப்படி எம்பெருமானுடைய அநுபவத்தோடு கலந்த மேகாநுபவம் அவளுக்கு நடந்தது. இப்படி அநுபவித்து, 'ஸாக்ஷாத் எம்பெருமான் மாதிரியே எங்களுக்கு நீ' என்று ஸ்தோத்ரம்செய்து கீழ்ச்சொன்னபடி வேண்டினாள்.

மழை வேண்டுமென்று கேட்கின்றாள். எதற்காக மழை? எப்படிப் பெய்யவேண்டும்? என்ற இதையெல்லாம் விவரித்தால்தான் வேண்டுதல் பூர்ணமாகும். அதற்காக 'வாழவுலகினிற்பெய்திடாய்' என்றாள். உலகம் வாழ்வதற்காக மழை வேண்டும். அது எப்படி வாழுமோ துன்பம் உண்டாகாதோ அப்படிப்பெய்யவேண்டும் என்று கருதினாள். 'தீங்கின்றி நாடெல்லாம் வள்ளல் பெரும்பசுக்கள் நீங்காதசெல்வம் நிறைய மாதம் மும்மாரிபெய்' என்று சொல்லக் கருதினாள். உலகம் வாழ்வது தவிர தமக்காக ஒன்று வேண்டுமென்று அடியார்கள் அபேக்ஷிப்பதில்லையன்றோ. இப்

படி இவள் அபேக்ஷித்தவுடனே அந்த மழைக் கண்ணன் ஒன்று சொன்னதுபோல் தோன்றிற்று. அதாவது-உலகத்திற்கெல்லாம் பொதுவாக உண்டாகும்(फलं) பலமிருக்கட்டும். வெகு கெட்டிக்காரியான உனக்கும் உன் அபிப்ராயத்திற்கிணங்கி உன் விருப்பப்படி நடக்கும் இந்தக் குழந்தைகளுக்கும் சிறப்பாக ஒரு வரம் கொடுக்க நான் விரும்புகிறேன். வேண்டியதைக் கேள்—என்பது. இதற்கு மறுமொழி கூறவெண்ணி 'நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராடப்பெய்திடாய்' என்றாள். பரமைகாந்திகளுக்கு பகவத்ப்ராப்தி தவிர மற்றெந்த பலமும் அபேக்ஷிதமன்று. அவர்கள் பகவத்ப்ரீதிக்காகவென்று சாஸ்திரம் விதித்த நித்யநைமித்திக க்ரியைகளைச் செய்துவருவார்கள். இப்படி இவர்கள் தமக்காக ஒரு பலனையும் கோராமல் சாஸ்த்ரவச்யர்களாய்த் தமக்கு விதித்த க்ரியைகளைச் செய்தால் அதனால் உலக நன்மையெல்லாம் தானே ஏற்படும். கெடுதல்களெல்லாம் நசித்துவிடும், உண்டாகாமலும் தடைபட்டுவிடும். இப்படிச் செய்யும் நித்யநைமித்திக க்ரியைகளையெல்லாம் இவர்கள் பகவத்கைங்கர்யமென்று செய்வார்கள். பகவானிடத்திலுள்ள அபாரப்ரீதியாலே அவனது கைங்கர்யத்தைச் செய்வதிலும் இவர்களுக்கு ப்ரீதி அதிகமாயிருக்கும். செய்வதெல்லாம் வெகு ப்ரியமாயிருக்கும். மோக்ஷத்திற்குப்போய் பெறும் புருஷார்த்தம் அவனது கைங்கர்யமே. அது இங்கேயே கிடைக்கப்பெற்றால் அதில் இவர்களுக்கு வெகு மகிழ்ச்சி உண்டாம். ஆகவே இந்தக் கோபகுமாரி தனக்காக விசேஷித்து ஒரு பலனை மேகத்தினிடத்தில் அபேக்ஷிப்பது முடியாத காரியம். ஆகிலும் உன்னால் எனக்குத் தனியே ஒரு காரியமும் ஆகவேண்டியதில்லை என்று நிர்தாக்ஷிண்யமாகச் சொல்வதும் முடியாது. இப்படிச் சொல்வதானால் நிர்த்ரவமான கடினசித்தம் பெற்றிருக்கவேண்டும். பகவானிடத்தில் உள்ளபடி பக்தி இருக்குமாகில் இவ்வித கல்நெஞ்சு ஒருவருக்கும் இருக்காது. இந்தக் கோபகந்யை உலகமெல்லாம் கண்ணனென்று இருக்குமவளாகையால் எல்லோரிடத்திலும் ப்ரீதியும் தாக்ஷிண்யமும் நிறைந்த நல்ல நெஞ்சு பெற்றிருந்தாள். ஆகவே ம்ருதுவாகவும் விநயமாகவும் கெட்டிக்காரத்தனமாகவும் தன் ஸ்வபாவத்திற்குச் சிறிதும் மாறுதலில்லாமலும் ஒன்று சொன்னாள். 'ஓ மேகமே எங்களுக்கு வேண்டியது என்ன தெரியுமோ? மார்கழி நீராட்டம் முதலிய பகவத்கைங்கர்யங்கள் நிறைவேறுவதற்காக ஆறுகள் ஏரிகள் குளங்கள் எல்லாம் நிறைந்து பரிசுத்தமான தீர்த்தம் கிடைக்கப்பெற்றிருப்பதுதான். இதற்காகவும் நீ மழை பெய்யவேண்டும்' என்று. இப்படிப் பேசி மேகாநுபவத்தை முடித்துவிட்டு மேல் செய்யவேண்டியதைப்பற்றி எண்ணித் தோழிகளைப் பார்த்தாள். அப்பொழுது ஒரு பெண் மிகப் பரிஹாஸமாக 'எல்லோரும் அவரவர்கள் வீட்டுக்குப் போங்கள் அம்மா. இப்பொழுது நாம் செய்யவேண்டியது ஒன்றுமில்லை' என்றாள். 'இதென்னடி பைத்தியக்காரத்தனமாய் ஏதோ பேசுகிறாய்' என்று மற்றொரு பெண் அவளை ஆக்ஷேபித்துப் பேசினாள். அதற்கு அவள் 'நம்முடைய ராணி இப்பொழுதுதானே மேகத்தினிடத்தில் 'நாங்களும் மார்கழி நீராடப் பெய்திடாய்' என்று வேண்டிக்கொண்டிருக்கிறாள். அது பெய்தபிறகன்றோ நாம் நீராடப் போகவேண்டும். அதுவரையில் நாம் வெறுமனே இருக்கவேண்டியதுதானே' என்று தனது அபிப்ராயத்தை விவரித்துக் கூறினாள். இதன்மேல் மற்றொருவள் 'இப்பொழுது நமது ஆறு குளங்களெல்லாம் வறண்டுகிடக்கின்றனவோ? நமக்கு நீராட ஜலமே இல்லையா? இனி மழைபெய்துதான் ஆகவேண்டுமோ? எல்லா வளமும் சிறிதும் குறைவில்லாமல் பொருந்திய நமது நாட்டில் இப்படியும் பேசுவாருண்டோ' என்று சிறிது வேகமாகப்பேசினாள். இதைக்கேட்ட அந்தப்பெண் மறுபடியும் சிரித்துக்கொண்டே 'நிலை இதுவாயிருக்க நமது எஜமானி மேகத்தைப்பார்த்து நாங்கள் மார்கழிநீராடப் பெய்திடாய் என்று வேண்டினது எப்படி' என்று கேட்டாள்.

இதையெல்லாம் கேட்டுக்கொண்டிருந்த நாயகப்பெண் தோழிகளின் ஸந்தேஹம் தீர உண்மையை எடுத்துரைத்தாள். இப்பொழுது நாம் செய்ய உத்தேசித்திருக்கிற நீராட்டத்திற்குத் தீர்த்தமில்லையென்பதற்காக நான் மழையை ப்ரார்த்திக்கவில்லை. நாம் தினம் அத்புதமாய் ஜலக்ரீடை பண்ணிவந்துகொண்டிருக்கவில்லையா? ஆறுகளிலும் குளங்களிலும் ஜலமில்லையென்றால் இன்றைக்கு இந்த வ்ரதத்தை அநுஷ்டிக்க நாம் ஏற்பாடு செய்திருப்போமா? நாம் நமது க்ருஹங்களைவிட்டுப் புறப்பட்டிருப்போமா? நடந்த மார்கழி மாஸத்தில் அநுஷ்டிக்கப்பட்ட வ்ரதத்தின்

பலமாக வர்ஷாகாலத்தில் ஸம்ருத்தியாகப் பெய்த மழையினால் ஆறு குளங்களெல்லாம் நிறைந்து இப்பொழுது நமது நீராட்டம் நடப்பதற்குரிய ஜலஸௌகர்யம் பூர்ணமாகவிருக்கின்றது. இப்படியே இப்போது அநுஷ்டிக்கப்படும் வ்ரதத்தின் பலமாக வரும் பர்வகாலங்களில் மழைபெய்து ஜலஸம்ருத்தி உண்டானால் அடுத்த மார்கழியில் நாமும் நம் தோழிகளும் இந்த வ்ரதத்தை அநுஷ்டிக்க முடியும். இப்படி மேல்மேலும் நடக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தேன்' என்றாள். தங்களுக்குண்டான ஸந்தேஹம் நீங்கி பெண்கள் எல்லோரும் ஸந்தோஷப்பட்டார்கள்.

5 மாயனை.

அதன் பிறகு அந்த நாயகப்பெண் 'இனி நாம் புறப்படலாமா? நமது தோழிகள் யாவரும் வந்துவிட்டார்களா?' என்று கேட்டுவிட்டு சுற்றுமுற்றும் பார்த்தாள். அப்பொழுது ஒரு பெண் இவளைப்பார்த்து ஒரு கேள்வி கேட்டாள். நாம் அநுஷ்டிக்கும் வ்ரதத்திற்கு உலக நன்மை பலனென்று சொன்னாய். நமக்குத் தனியே பலன் ஒன்று உண்டோவெனில் மேல்மேல் இந்த கைங்கர்யம் நடக்கும்படியான ஸௌகர்யந்தான் நமக்குப் பலனென்று குறிப்பிட்டாய். இதெல்லாம் இருக்கட்டும். இங்கு நாம் செய்யும் தர்மகார்யங்களுக்கெல்லாம் லோகாந்தரத்தில் அநுபவிக்கும்படியான உத்தமபலன் உண்டு என்று சொல்லுகின்றார்களே அவ்வித பலன் இப்பொழுது நாம் அநுஷ்டிக்கும் இந்த வ்ரதத்திற்கு ஒன்று இராதா? அதைப்பற்றிக் கொஞ்சம்சொல்லு. தெரிந்துகொள்கின்றோம்' என்றாள். அதற்கு அவள் இவ்வாறு மறுமொழி கூறினாள்:—

சாஸ்திரங்கள் விதிக்கின்ற கர்மங்கள் பலவிதங்களாயிருக்கின்றன. 'இந்தப்பலன்வேண்டுமானால் இந்த கர்மம் செய்' என்றிப்படி அந்தந்த பலனை உத்தேசித்துப் பல கர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளுக்கு காம்யகர்மங்களென்று பெயர். ஸ்வர்க்கத்திற்காக அக்நிஹோத்ரம், மழைக்காக காரீரி. ப்ரஹ்மவர்சஸத்திற்காகஸௌர்யேஷ்டி, என்றவிவையெல்லாம் காம்யங்கள். ஒரு பலத்தையும் உத்தேசிக்காமல் ஜீவனுள்ளவரையில் இதைச் செய்யவேண்டுமென்று சில கர்மங்கள் விதிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றுக்கு நித்யகர்மங்களென்று பெயர். ஸந்த்யாவந்தநம் பஞ்சமஹாயஜ்ஞங்கள் இவையெல்லாம் இவ்விதமானவை. சில நிமித்தங்கள் உண்டானபோது சில கர்மங்களைச் செய்யவேண்டுமென்று சாஸ்திரம் விதிக்கின்றது. இவற்றுக்கு நைமித்திககர்மங்களென்று பெயர். க்ரஹண ஸ்நாந தர்ப்பணங்கள் முதலியன இத்தகையவை, சில காம்யகர்மங்களே நித்யமாகவும் விதிக்கப்பட்டிருக்கின்றன. ஸ்வர்க்கத்திற்காக விதிக்கப்பட்ட அக்நிஹோத்ரம் காம்யமென்று சொன்னேன். அதுவே யாவஜ்ஜீவம் அக்நிஹோத்ரம் செய்யவேண்டுமென்று நித்யமாகவும் விதிக்கப்பட்டிருக்கிறது. இவற்றில் அந்தந்த பலனைப் பெறவிரும்புகின்றவர்கள் அதற்கு ஸாதனமான அந்தந்த காம்ய கர்மத்தைச் செய்யவேண்டும். பலனைப் பெற விரும்பாதவர்கள் காம்யகர்மத்தைச் செய்யவேண்டியதில்லை. செய்தால் அந்த பலன் கிடைக்கும். செய்யாவிட்டால் கிடைக்காது. அவ்வளவுதான். ஆனால் நித்யகர்மங்களையும் நைமித்திககர்மங்களையும் அவச்யம் எல்லோரும் செய்தாகவேண்டும். செய்யாவிட்டால் பாபம் வரும். செய்வதால் முன் உண்டான பாபங்களில் சில கழியும். ஆனால் தானே உண்டாகும் பலன் இது உத்தேச்யமன்று. செய்யாவிட்டால் பாவம் என்பதற்காகவே இவற்றைச் செய்வர். காம்யமாயும் நித்யமாயுமிருக்கும் அக்நிஹோத்ரம் முதலான கர்மங்களையும் அவச்யம் செய்யவேண்டும். செய்யத் தவறினால் பாபம் உண்டு ஆனால் 'ஸ்வர்க்கம் கிடைப்பதற்காகச் செய்கின்றேன்' என்று அதன் பலனை உத்தேசித்துச் செய்தால் அப்போது அது காம்யமாகின்றது. இப்படி இதை அநுஷ்டிக்கும்போது நித்யமாகத் தனியே செய்யவேண்டியதில்லை. காம்யத்தினாலேயேஇதுவும்செய்யப்பட்டதாகஆகிறது.

இது கர்மங்களைப்பற்றிய விவரம். இவற்றைப்பற்றிப் பெரியோர்கள் வெகு ஸூக்ஷ்மமான ஒரு விசேஷத்தைக் கூறுவர். மோக்ஷமெனப்படுகின்ற பகவத்ப்ராப்தி தவிர மற்ற பலன்களெல்லாம் மிக அல்பமானவை. ஆகையால் உண்மையை உணர்ந்தவர்கள் அவற்றை விரும்பமாட்டார்கள். அவற்றை விரும்பி ஒரு கர்மமும் செய்யமாட்டார்கள். ஆனால் எல்லா கர்மங்களுக்கும் பகவத்ப்ரீதியை உத்தேச்யமாகக் கொள்வார்கள். இப்படி நாம் அநுஷ்டிக்கும்க்ரியையின்பலன் பகவானுக்கே, நமக்கில்லை என்று கருதுவது ஒரு அம்சம். பலன் அவனைச் சேர்ந்ததாகையாலே அதற்குக் காரணமான க்ரியையும் அவனுடையதே.

(தொடரும்)

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீமதே ஸ்ரீவண்சடகோப ஸ்ரீவீரராகவ யதீந்த்ர மஹாதேசிகாய நம:

43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் ஸஞ்சார க்ரமம்

ஸுமார் 8-வருஷகாலமாக திருவள்ளூரிலேயே கோயில்கொண்டிருந்த ஸ்ரீமாலோலன் திடீரென்று ஸஞ்சாரமாக எழுந்தருள ஸங்கல்பித்துக்கொண்டான். ஸ்ரீ அழகியசிங்கரும் அவனுடைய ஸங்கல்பத்தை அறிந்து அதன் ப்ரகாரம் ஸஞ்சாரமாக எழுந்தருளத் திருவுள்ளம்பற்றி நந்தன வருஷம் பங்குனி மாதம் 9ந்தேதி (22-3-53) காலை 6-15 மணிக்கு திருவள்ளூரிலிருந்து புறப்பட்டு சிஷ்யகோடிகள் புடைசூழ்ந்து பின்தொடர 5மைல் தூரத்திலுள்ள கீழானூர் எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் மிகவும் பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீமாலோலனையும் ஸ்ரீமதழகியசிங்கரையும் ஆராதித்து க்ருதார்த்தரானார்கள். அன்று இரவே 10 மைல் தூரத்திலுள்ள திருக்கள்ளம் எழுந்தருளினார். கந்தாடை க்ருஷ்ணமாசார்யர் துரைஸாமி அய்யங்கார் முதலிய அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கரை எதிர்கொண்டழைத்து யதாசக்தி பகவத் பாகவத ஆராதனைகளை நடத்திவைத்து ஸ்ரீ அழகியசிங்கரின் அநுக்ரஹத்திற்கு பாத்திரர்களானார்கள். அவ்வூரில் 10 தினங்கள் எழுந்தருளியிருந்தார். அங்கு 42-வதுபட்டம் ஸ்ரீ அழகியசிங்கரின் முதல் மாஸ ஆராதநம் வெகு விமர்சையாக நடந்தேறியது. 1-4-53 இரவு 5மைல் தூரத்திலுள்ள சாளப்பாக்கம் எழுந்தருளினார். அவ்வூரில் எம்பெருமான் வீதி உத்ஸவம் முதலிய ஸகலஉத்ஸவங்களையும் கண்டருளினார். அவ்வூரில் 4 தினங்கள் எழுந்தருளி இருந்தார். அங்கிருந்து 6-4-53ல் 5மைல் தூரத்திலுள்ள பாக்கத்திற்கு எழுந்தருளினார். அன்றிரவு மறுபடியும் 13மைல் தூரத்திலுள்ள திருக்கள்ளம்எழுந்தருளி 5தினங்கள் தங்கியிருந்தார். 11-4-53ல் அங்கிருந்து 3 மைல் தூரத்திலுள்ள காவனூருக்கு எழுந்தருளினார். அவ்வூர் வாஸிகள் இரண்டு தினம் வெகு விமர்சையாக ஸ்ரீ எம்பெருமானை ஆராதித்தார்கள். 13-4-53ல் இரவு அங்கிருந்து $8\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள களாம்பாக்கம் எழுந்தருளி அங்கிருந்து 18 மைல் தூரத்திலுள்ள கோழிப்படாரி (கோவில் பதாகை)க்கு எழுந்தருளினார். 15-4-53ல் இரவு 4 மைல் தூரத்திலுள்ள பருத்திப்பட்டுக்கு எழுந்தருளினார். அங்கு ஸ்ரீ. உப. வீரராகவாசார்யர் ஸ்ரீ. உப. ஸ்ரீநிவாஸதேசிகாசார்யர் முதலிய ஊர் வாஸிகள் ஸ்ரீ அழகியசிங்கரை ஸகல மரியாதைகளுடனும் எதிர்கொண்டழைத்து வெகு விமர்சையாக ஆராதனைகளை நடத்தி க்ருதார்த்தர்களானார்கள். அங்கு மூன்று தினங்கள் தங்கி இருந்தார். 18-4-53ல் இரவு அங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள அம்பத்தூருக்கு எழுந்தருளினார். அங்கு ஸ்ரீபாஷ்ய காலக்ஷேபம் ஸ்ரீ சிஷ்யகோடிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி ஸ்ரீமதழகியசிங்கரால் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிரவே அங்கிருந்து 8 மைல் தூரத்திலுள்ள வில்லிவாக்கம் எழுந்தருளினார். அங்கு இரண்டு தினம் எழுந்தருளி இருந்தார். 21-4-53 இரவு அங்கிருந்து 7 மைல் தூரத்திலுள்ள சேத்துப்பட்டுக்கு எழுந்தருளினார். அங்கு புருஷோத்தமதாஸ் என்கிற ஷேட் மிகவும் பக்தியுடன் தம்முடைய பங்களாவிற்கு ஸ்ரீஎம்பெருமான் ஸ்ரீ அழகியசிங்கர் இவர்களை எழுந்தருளப்பண்ணி 4 தினங்கள் ஸ்வகுடும்பத்தோடு ஸகல தாஸ்வ்ருத்தியையும் செய்து வெகு விமர்சையாக ஆராதித்தார். 26-4-53 ஞாயிற்றுக்கிழமை காலை த்வாதசியானபடியால் 8மணிக்குள் பகவத் பாகவத ஆராதனைகளை முடித்துக்கொண்டு பக்தகோடிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி அங்கு இருந்து 6 மைல் தூரத்திலுள்ள திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளுவதாக ஸங்கல்பித்துக்கொண்டு சேத்துப்பட்டைவிட்டு புறப்பட்டார். அவ்வமயம் ஷேட் அவர் குடும்பத்தினரும், ஸ்ரீமாலோலனும், ஸ்ரீ அழகியசிங்கரும் தங்களுடைய இல்லத்தைவிட்டு எழுந்தருளிவிடுவதால் உண்டான பிரிவைத் தாங்கமுடி

யாமல் ஸ்ரீமதழகியசிங்கரை அனேகஆவ்ருத்தி தெண்டனிட்டு மறுமுறை இங்கு எழுந்தருளி கொஞ்சநாள் ஸேவைஸாதித்து எங்களை க்ருதார்த்தர்களாக ஆக்கவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீமதழகியசிங்கரும் ஸௌகரியமிருந்தால் திரும்பிவருவதாக ஸாதித்துவிட்டு அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டு திருவல்லிக்கேணிக்கு எழுந்தருளினர். அவ்வமயம் சென்னை நகரவாஸிகளனைவரும் திரள் திரளாக ஸமுத்திரக்கரையில் வந்துசேர்ந்து ஸ்ரீமதழகியசிங்கரை பூர்ணகும்பாதிகளுடன் அழைத்து தந்தப்பல்லக்கில் எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஸகல வாத்யமும் முழங்க ஸகல பரிஜனபரிவாரங்களுடனும் முக்கியமான வீதிகளில் ஊர்வலமாக எழுந்தருளப்பண்ணிக்கொண்டு ஸ்ரீ அஹோபிலமடத்தில் எழுந்தருளப்பண்ணினர்கள். அங்கு 13 தினங்கள் எழுந்தருளி இருந்தார். அவ்வூரில் ஸ்ரீமதழகியசிங்கர் சிஷ்யகோடிகளின் ப்ரார்த்தனைக்கிணங்கி டோலோத்ஸவத்தின்போது அநேக தடவை உபந்யஸித்தார். அங்கு 42-வது பட்டம் ஸ்ரீமதழகியசிங்கரின் இரண்டாவது மாஸ ஆராதநம் வெகு விமர்சையாக நடந்தேறியது. 8-5-53 இரவு 5 மைல் தூரத்திலுள்ள பி. ஆர். ஸ்குயரில் இருக்கும் பாராஞ்சி க்ருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் ப்ரார்த்தனைக்கிணங்கி அவருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அந்த ஸ்வாமி இரண்டு தினங்கள் வெகு விமர்சையாக ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹனையும் ஸ்ரீமதழகியசிங்கரையும் ஸபரிவாரமாக ஆராதித்து க்ருதார்த்தரானர். 10-5-53 இரவு அங்கிருந்து 7 மைல் தூரத்திலுள்ள கோபாலபுரத்திலிருக்கும் இஞ்ஜினீயர் கோபாலாச்சாரியருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அன்றிரவே அங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள ஷணாய் நகர் (அமிஞ்ஜிக்கரையில்) இருக்கும் தாமல் பார்த்தஸாரதி அய்யங்காருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அங்கிருந்து 7 மைல் தூரத்திலுள்ள மைலாப்பூருக்கு 12-5-53 இரவு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் ஸ்ரீமதழகியசிங்கரை ஸகல மரியாதைகளுடனும் எதிர்கொண்டு அழைத்து தந்தப்பல்லக்கில் ஊர்வலமாக ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளவேண்டுமென்று ப்ரார்த்திக்க ஸ்ரீமதழகியசிங்கரும் அதை அங்கீகரித்து அவ்வாறே எழுந்தருளினர். அங்கு 4 தினங்கள் தங்கியிருந்தார். இரண்டு தினங்கள் ஸ்ரீமதழகியசிங்கரின் உபந்யாஸங்கள் நடைபெற்றன. 15-5-53 இரவு அங்கிருந்து 5 மைல் தூரத்திலுள்ள அடையாரிலிருக்கும் ஸ்ரீ அஹோபிலமடம் மானேஜர் ராவ்பகதூர் டி. ஸ்ரீநிவாஸ அய்யங்காருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அந்த ஸ்வாமி வெகு விமர்சையாக ஸகல ஆராதனாதிகளை நடத்திவைத்து க்ருதார்த்தரானர். அன்றிரவு அங்கிருந்து ஐந்தரை மைல் தூரத்திலுள்ள ஸ்ரீ லக்ஷ்மீபுரத்திலிருக்கும் பூண்டி வாஸுதேவ ஐயங்காருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். 17-5-53 இரவு அங்கிருந்து 6 மைல் தூரத்திலுள்ள முத்தியாலுபேட்டை தம்புச்செட்டித்தெருவிலிருக்கும் மங்கலம் ராமாநுஜாசார்யருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளி 3 தினங்கள் தங்கியிருந்தார். 20-5-53 இரவு அங்கிருந்து 7 மைல் தூரத்திலுள்ள அபிராமாபுரத்தில் இருக்கும் டால் நரஸிம்ஹ அய்யங்காரின் க்ருஹத்திற்கு ஸகல வாத்ய கோஷங்களுடன் தந்தப்பல்லக்கில் ஊர்வலமாக எழுந்தருளினர். அந்த ஸ்வாமி வெகு விமர்சையாக ஸகல ஆராதனாதிகளையும் நடத்திவைத்து க்ருதார்த்தரானர். 21-5-53 இரவு அங்கிருந்து 3 மைல் தூரத்திலுள்ள மாம்பலத்திலிருக்கும் ராமகிருஷ்ண ஹைஸ்கூலுக்கு தந்தப்பல்லக்கில் ஊர்வலமாக எழுந்தருளினர். அங்கு 5 தினங்கள் தங்கியிருந்தார். இங்கு 3 தினங்கள் ஸ்ரீ அழகியசிங்கரின் உபந்யாஸம் நடைபெற்றது. 27-5-53 இரவு அங்கிருந்து கால் மைல் தூரத்திலுள்ள கோடம்பாக்கத்தில் இருக்கும் திருக்குடந்தை சக்ரவர்த்தி அய்யங்காருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அன்று ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி ஆனபடியால் ஸ்ரீ அழகியசிங்கரின் உபந்யாஸமும் விசேஷ பகவத்பாகவதாராதநமும் நடந்தேறியது. அன்றிரவு அங்கிருந்து 1 மைல் தூரத்திலுள்ள தி. நகர் ராமநாதபுரம் தெருவில் இருக்கும் திருக்குடந்தை ஸந்தான அய்யங்காருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளி 2 தினங்கள் தங்கி இருந்தார். அங்கு 42-வது ஸ்ரீமத் அழகியசிங்கரின் 3-வது மாஸாராத

னம் மிகவும் விசேஷமாக நடந்தது. 29–5–53 அங்கிருந்து 1 மைல் தூரத்திலுள்ள கோட்ஸ் ரோட்டில் இருக்கும் வடூர் சம்பத் அய்யங்காருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அன்றிரவு அங்கிருந்து 1 மைல் தூரத்திலுள்ள பழைய மாம்பலத்திற்கு எழுந்தருளி அங்கிருக்கும் பக்தகோடிகளால் ஒரு தினம் ஆராதிக்கப்பட்டார். 31–5–53 இரவு அங்கிருந்து 3 மைல் தூரத்திலுள்ள சைதாப்பேட்டையில் இருக்கும் சுந்தரவரதாச்சாரியார் மதுராந்தகம் காலேஜ் ப்ரின்ஸ்பால் T. ராமஸ்வாமி அய்யங்கார் முதலியவர்களுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி தந்தப்பல்லக்கில் ஊர்வலமாக வந்து விசேஷமாக அலங்கரிக்கப்பட்டிருந்த பந்தலில் எழுந்தருளி இருந்தார் அங்கு அவர்கள் 2 தினம் விசேஷமாக ஆராதித்தார்கள். 2–6–53 இரவு அங்கிருந்து 8 மைல் தூரத்திலுள்ள அடையாரில் இருக்கும் P. S. G. ராவ் ப்ரார்த்தனைக்கிணங்கி அவருடைய க்ருஹத்திற்கு எழுந்தருளினர். அவர் மிகவும் பக்தி ச்ரத்தையுடன் ஸ்ரீ மாலோலனையும் ஸ்ரீமத் அழகியசிங்கரையும் ஸபரிவாரமாக ஆராதித்து க்ருதார்த்தரானர். 3–6–53 இரவு அங்கிருந்து 15 மைல் தூரத்திலுள்ள தாம்பரத்திற்கு எழுந்தருளினர். திருவள்ளூர் ஸ்ரீ வீரராகவன் ஸன்னதியில் ஏஜண்டாக இருந்த களத்தூர் சக்ரவர்த்தி அய்யங்கார் முதலிய ஸ்வாமிகள் விசேஷமாக ஆராதித்து க்ருதார்த்தரானர்கள். 4–6–53 இரவு அங்கிருந்து $12\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள குளத்தூருக்கு எழுந்தருளினர். 5–6–53 இரவு அங்கிருந்து $3\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள சோமமங்கலம் எழுந்தருளினர். அங்கிருந்து $12\frac{3}{4}$ மைல் தூரத்திலுள்ள 37-வது பட்டம் ஸ்ரீ அழகிய சிங்கரின் பூர்வாச்ரம க்ராமமான பிள்ளைபாக்கத்திற்கு 6–6–53 இரவு எழுந்தருளினர். இந்த க்ராமவாஸிகள் எல்லோரும் ஸ்ரீமாலோலனையும் ஸ்ரீமத் அழகியசிங்கரையும் ஸபரிவாரமாக ஆராதித்து க்ருதார்த்தரானர்கள். 7–6–53 இரவு அங்கிருந்து $17\frac{1}{4}$ மைல் தூரத்திலுள்ள நீரளூர் க்ராமத்திற்கு எழுந்தருளி 5 தினங்கள் தங்கி இருந்தார். அக்ரஹார வாஸிகள் அனைவரும் பக்தி ச்ரத்தையுடன் விசேஷமாக ஆராதித்தார்கள். 12–6–53 இரவு அங்கிருந்து 11 மைல் தூரத்திலுள்ள தாமலுக்கு எழுந்தருளி 2 தினங்கள் தங்கி இருந்தார். அனந்தாசாரியார் முதலிய அவ்வூர் வாஸிகள் ஸ்ரீ எம்பெருமானையும் ஸ்ரீமத் அழகியசிங்கரையும் ஸபரிவாரமாக ஆராதித்து க்ருதார்த்தரானர்கள். 14–6–53 இரவு அங்கிருந்து $4\frac{1}{2}$ மைல் தூரத்திலுள்ள நங்கமங்கலம் எழுந்தருளினர். அங்கு ராஜா என்கிற ஸ்ரீநிவாஸாசார்யர் ஸ்வாமி ஆராதித்து க்ருதார்த்தரானர். அங்கிருந்து 10 மைல் தூரத்திலுள்ள பூண்டிக்கு அன்றிரவு எழுந்தருளினர். அவ்வூர் வாஸிகள் விசேஷமாக ஆராதித்தார்கள். 16–6–53 அங்கிருந்து 13 மைல் தூரத்திலுள்ள லாலாபேட்டைக்கு எழுந்தருளினர்.

(தொடரும்)

ஸ்ரீ:

செய்திகள்

சிங்கவேள்குன்றத்தான் மங்களாசாஸநம்

ஸ்ரீ அஹோபிலமடம் 43-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கர் ஸ்ரீ வீரராகவசடகோப யதீந்த்ரமஹாதேசிகன் ஸஞ்சாரக்ரமமாக ஸ்ரீ அஹோபிலக்ஷேத்ரத்திற்கு 5—7—53 ஞாயிற்றுக்கிழமை பாச்சபள்ளியிலிருந்து எழுந்தருளினர். ஸ்ரீ அழகியசிங்கரின் விஜயத்தை முன்னிட்டு ஸம்விதானங்களெல்லாம் நன்றாக செய்யப்பட்டிருந்தன. அன்றைய தினம் ப்ரஹ்லாதவரதனை மங்களாசாஸநம் செய்ய எழுந்தருளினர். தேவஸ்தானத்திலிருந்து சத்ரசாமரவாத்யகோஷங்களுடன் ஸ்ரீ ப்ரஹ்லாதவரதனுடைய மாலை பரியட்டங்களையும் ஸ்ரீசடாரியையும் எழுந்தருளப்பண்ணிக்கொண்டுவந்து பூர்ணகும்பாதிகளை ஸமர்ப்பித்து மங்களாசாஸநத்திற்கு எழுந்தருள வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். ஸ்ரீ அழகியசிங்கரும் 'யநேர்ாzஷீ' என்று ஸ்ரீ சடாரியையும் மாலைபரியட்டங்களையும் பெற்றுக்கொண்டு மங்களாசாஸநத்திற்கு எழுந்தருளியாயிற்று. கோபுரவாசல் தாண்டியதும் தண்டனிட்டு உட்சென்று உபஹாராதிகளுடன் ப்ரஹ்லாதவரதனை மங்களாசாஸநம் செய்தருளினர். பிறகு ஸ்ரீ அழகியசிங்கருக்கு மாலை பரியட்டம் ஸ்ரீசடாரி முதலியவைகள் ஸ்ரீ அழகியசிங்கரின் பிருதாவளிகளைச்

சொல்லி 'ஸ்ரீவீரராகவயதீந்த்ரமஹாதேசிக னுக்கு அருளப்பாடு' என்று அருளப்பாடிட்டு ஸாதித்தானதும் அங்கிருந்து விடைபெற்று அம்ருதவல்லித்தாயார்ஸந்நிதிமுதலியவைகளி ல்மங்களாசாஸனம் செய்தருளினர். அங்குள்ள நூற்றுக்கால் மண்டபத்தையும் அதிலுள்ள சித்ரவேலைப்பாடுகளையும் கண்டு மகிழ்ந்தார்.

மறுநாள் யோகந்ருஸிம்ஹன் ஸந்நிதிக் கெழுந்தருளி மங்களாசாஸநம் ஆனதும் சத்ர வடவேன பலகாலும் ஸேவிதித்தருளினர். மறுநாள் பார்கவனை மங்களாசாஸனம்பண்ணி யானதும் மேல் அஹோபிலத்திற்கு எழுந் தருளியாயிற்று. அங்கு பைரவகுண்டத் தருகே கோயில் பரிஜனங்களாலே ஸமர்ப்பிக் கப்பட்டமரியாதைகளை ஸ்வீகரித்துக்கொண்டு ஸ்ரீசடாரியானதும் கோயிலுக்குள் எழுந் தருளி த்வஜஸ்தம்பத்தருகே தண்டனிட்டு த்வாரபாலகர்களுடையஅநுமதிபெற்றுகுஹா க்ருஹத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ அஹோ பில ந்ருஸிம்ஹனை மங்களாசாஸனம் செய் தருளினர். மற்றும் செஞ்சுலக்ஷ்மி ஆழ்வா ராசார்யர்களையும் மங்களாசாஸனம் பண்ணி யாயிற்று.

மறுநாள் த்வாதசி பாரணை முடிந்ததும் பாவநந்ருஸிம்ஹன் ஸன்னிதிக்கு எழுந்தருளி யாயிற்று. பாம்பு, புலி, வஸித்திடும் காட்டி னூடே மிக ச்ரமமான ஒற்றையடிப்பாதையில் ஸௌமார்6மையில்தூரம் ஸ்ரீ அழகியசிங்கர் திரு மேனிச்ரமத்தையும்பாராமல் எழுந்தருளியது மிக்க ஆச்சர்யமே. அவ்வெம்பெருமானை மங்க ளாசாஸனம்பண்ணிவிட்டு அன்றே மேல் அஹோபிலத்திற்கு எழுந்தருளினர்.

மறுநாள் வழக்கப்படி அபிகமன ஆராத னத்தை முடித்துக்கொண்டு க்ரோடந்ருஸிம் ஹனை மங்களாசாஸனம் செய்துகொண்டு மாலோலன் ஸன்னிதிக்கு எழுந்தருளினர். அங்கு மூலவருக்கு எதிரிலுள்ள உத்ஸவமூர்த் தியினுடைய பீடத்தில் ஸஞ்சாரலோலனை உத்ஸவமூர்த்தியை எழுந்தருளப்பண்ணி திரு வாராதனம் கண்டருளப்பண்ணியாயிற்று. அர் தோதயம் மஹோதயம்போல் அனேக வரு ஷங்கள் கழித்துக் கிடைக்கும் இச்சேர்த்தி யின் ஸேவையை ஸேவிப்பதற்கு சென்னை, திருக்குடந்தை, ஸ்ரீமுஷ்ணம், திருமலை, காஞ்சீபுரம் முதலியவிடங்களிலிருந்து அநேக லௌகிக வைதிக ஸ்வாமிகள் வந்திருந்தார் கள். ஸ்ரீ அழகியசிங்கரும் புளகாங்கிதராய், ஆநந்தபாஷ்பம் பெருக, சரணாகதிகத்யம் ஸ்தோத்ரரத்நம், ஜிதந்தாஸ்தோத்ரம், பல் லாண்டு, அங்கண்ஞாலமஞ்ச என்னும் சித்த ரஞ்சகமான ஸ்தோத்ரங்களால் மங்களாசாஸ நம் செய்தருளும்போது அருகிலிருந்தோர் 'ஐஷ) ஒஃ ஸஷயும் ஜநூ ஸாவுஹாதா வ ஒஃ நிஶா' என்று சொல்லி உள்ளம்பூரித்தார்கள்.

ஸ்ரீஅழகியசிங்கர் அருளப்பாடுடன் தீர்த் தம் சடாரி முதலியவைகளை ஸ்வீகரித்துக் கொண்டு மாலை மரியாதைகள் ஆனதும் கோஷ் டிக்கு தீர்த்தம் சடாரியானதும் கோஷ்டிக்கு மூடநெய்பெய்து முழங்கை வழிவார அமுது செய்விக்கப்பட்ட சர்க்கரைப்பொங்கலை வினி யோகம் செய்தார்கள். பிறகு ப்ரஹ்லாத படிக்கு எழுந்தருளியாயிற்று. அங்கிருந்து மேல் ஸன்னிதிக்கு எழுந்தருளி இஜ்யாகால ஆராதன மங்களஹாரத்தியானதும் மதயாஹ் னமே ஜ்வாலாந்ருஸிம்ஹனை மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியாயிற்று.

மறுநாள் அதிகாலையில் பவநாசினியில் நீராட்டம்செய்துகொண்டு எழுந்தருளியா யாயிற்று. அப்பொழுது 'ஃயஒஷவஸாதெ- ஷு ஸாய9ஃவமாஷெத' என்கிறபடி பர தாழ்வான் குள்ளக்குளிர ஸரயூநதியில் நீராட் டம் பண்ணிக்கொண்டது நினைவிற்குவந்தது. பிறகு பவநாசிநிதீர்த்தங்கொணர்ந்து ஸ்ரீ ந்ருஸிம்ஹனுக்கும் திருமஞ்ஜநம் கண்டருளப் பண்ணியாயிற்று. பிறகு கீழ் அஹோபிலத் திற்கு எழுந்தருளும்போதுமத்யேமார்க்கத்தி லுள்ள காரஞ்ச ந்ருஸிம்ஹனை மங்களாசாஸ நப்பண்ணியாயிற்று. இத்துடன் 'ஜாவொ- ஹொவிஃஊொயொஷ' என்னும் ச்லோகத்தில் சொல்லப்பட்ட நவந்ருஸிம்ஹர்களுடையவும் மங்களாசாஸநம் பூர்த்தியாகி கீழ் அஹோ பிலஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று.

ஸ்ரீ அழகியசிங்கரின் விஜயத்தையறிந்த ஆந்த்ரதேசத்துவாஸிகளான அநேகர் ப்ரதி தினம் வந்து பெருமாளையும் ஸ்ரீமதழகியசிங்க ரையும் ஸேவித்துவருகின்றனர். ப்ரதிதினம் காலையில் ஸ்ரீ அஹோபிலமடத்தில் விச்வரூப அபிகமநாராதனமானதும் ஸ்ரீ ப்ரஹ்லாதவர தன்ஸன்னிதியில் திருவாராதனம்கண்டருளப் பண்ணி, மங்களஹாரத்தி செய்தருளும்படி யிருக்கிறது. ஸ்ரீ அழகியசிங்கர், இத் திவ்ய தேசத்தில் அவச்யம் செய்யவேண்டிய சில கைங்கர்யங்களை உடனேயே செய்யத் திரு வுள்ளம்பற்றி கார்யங்கள் நடைபெற்றுவரு கின்றன. ப்ராகாரத்தில் தீர்த்தவஸதிக்காக

ஒரு கிணறு வெட்டி கட்டியாகிறது. ஆங்காங்குள்ள புஷ்கரணிகளையும், கிணறுகளையும் சுத்தம்செய்து சீர்படுத்த வேலை நடந்துவருகிறது. ஸ்ரீ அழகியசிங்கர்பல்லாண்டுபல்லாண்டுகளாக எழுந்தருளியிருந்து அநேகதடவைகள் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்திற் கெழுந்தருளி மங்களாசாஸநம் செய்தருள ஸ்ரீ மாலோலன்அநுக்ரஹிக்கவேண்டுமென நாம் ப்ரார்த்திக்கிறோம்.

ஸ்ரீ அழகியசிங்கரின் ஸங்கல்ப மஹோத்ஸவம்

க்ராமைகராத்ரமாய் ஸஞ்சரிக்கும்ஸன்யாஸிகள் '**दयार्थं सर्वभूतानां वर्षास्वेकत्रसंवसेत् ।**'**'आषाढयादि चतुर्मासं कार्तिकान्तन्तु संवसेत्**' என்கிற ஸ்ம்ருதிவசநங்களின்படி வர்ஷாகாலத்தில் ஒரே இடத்தில் தங்கிவிடுகிறார்கள். இதற்கு முக்யகாரணம்-வர்ஷாகாலத்தில் ஜலத்திலும் ஸ்தலத்திலும் அநேகஜீவராசிகள் உண்டாகும். அவைகளுக்கு அவர்களுடைய ஸஞ்சாரத்தால் கெடுதல் ஏற்படக்கூடாது என்பதுதான். மேலும், நாம் ஸன்யாஸிகளை ஸாக்ஷாத் விஷ்ணுவாக நினைக்கிறோம். ஜ்ஞாநாதிகுண பரிபூர்ணராய் சப்தாதிவிஷயங்களில் விரக்தரான ஸன்யாஸிகளைக்காணில் நிரபேக்ஷ ரக்ஷணவிஷயத்தில் ஸன்யாஸிகளுக்கும் பகவானுக்கும் இருக்கும் ஸாம்யத்தைக் கணிசித்து க்ருஷ்ணனென்று நினைத்துக்கூப்பிடுகிறாள் பராங்குசநாயகி. 'விரும்பிப்பகவரைக்காணில் வியலிடமுண்டானே என்னும்' என்று நம்மாழ்வார் ஸாதித்திருக்கின்றார். ஆக பகவத்ஸாம்யம் அவர்களுக்கிருக்கிறது. பகவான் ஆஷாட சுக்லஏகாதசியில் சயனித்துக்கொள்வதால் அதற்கு சயன ஏகாதசி என்றும் கார்த்திகையில் எழுந்திருப்பதால் அதற்கு உத்தான ஏகாதசி என்றும் சொல்லுகிறோம். பகவத்துல்யர்களான இவர்களும்'**स्थितस्थितमुच्चलितः प्रयातां**' என்றபடி பகவான் சயனித்துக்கொள்ளும்போது ஸங்கல்பித்துக்கொண்டு ஒரே இடத்தில் தங்கவும் உத்தானத்தின்போது ஸஞ்சரிக்கவும் தொடங்குகிறார்கள்.

இவ்வருஷம் ஸ்ரீமத்வேதமார்க்கப்ரதிஷ்டாபநாசார்ய,பரமஹம்ஸபரிவ்ராஜகாசார்ய,ஸர்வதந்த்ரஸ்வதந்த்ரோபயவேதாந்தாசார்ய, ஸ்ரீ பகவத்ராமாநுஜஸித்தாந்தநிர்த்தாரண ஸார்வபௌம ஸ்ரீவண்சடகோப ஸ்ரீ வீரராகவசடகோபயதீந்த்ரமஹாதேசிகனின் சாதுர்மாஸ்ய ஸங்கல்ப மஹோத்ஸவம் ஸ்ரீ அஹோபில க்ஷேத்ரத்தில் ஆடி-மீ 11வ(26-9-53)ஞாயிற்றுக்கிழமைமிக விமர்சையாக நடந்தது.

அன்றையதினம் வழக்கம்போல் காலை 8மணிக்கு அபிகமன ஆராதனம் பூர்த்தியானதும் ஸ்ரீ பூவராஹனை ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் ஸன்னதிக்கு ஸமீபத்தில் அமைக்கப்பட்டிருந்த பந்தலில் எழுந்தருளப்பண்ணினார்கள். அங்கு ஸ்ரீ அழகியசிங்கர் பூவராஹனை ஆராதித்து ம்ருத்ஸங்க்ரஹணம் பண்ணிக்கொண்டாயிற்று. பிறகு ப்ரஹ்லாதவரதன், தாயார், ஆசார்யர்கள ஸன்னிதிக்கு எழுந்தருளி மங்களாசாஸநம் ஆனதும் கோஷ்டிக்கு சந்தனதாம்பூலாதிகள் எடுக்கப்பட்டன. பிறகு ஆழ்வார் கோனேரியில் திருமுடிவிளக்கம் ஆகி நீராட்டம் முதலிய அநுஷ்டானங்களை முடித்துக்கொண்டு ஸுமார் 12 மணிக்கு முன்புறம் யானையின்மேல் ஸ்ரீ வீரராகவனின் மரியாதைகள் எடுத்துச்செல்ல பின்புறம் சிஷ்யர் யதிராஜஸப்ததிசொல்ல திருவளுள்ரிலிருந்து வழக்கப்படிவந்த இரண்டு வெண்குடைகளின் நடுவில் ஸ்ரீ அழகியசிங்கர் ஸன்னிதிக்கு எழுந்தருளியாயிற்று. அவ்விடத்தில் பஞ்சசாந்தி ஜபித்தானதும் '**माधवश्चतुरो मासान् …असति प्रतिबन्धेतु मासान्वै वार्षिकानिह निवसामि**' என்று ஸ்ரீ அழகியசிங்கர் ஸங்கல்பித்துக்கொண்டானதும் சிஷ்யர்கள் '**निवसन्तु सुखेनात्र गमियष्मः कृतार्थताम् । यथाशक्ति च शुश्रूषां करिष्यामो वयं मुदा ॥**' என்று ப்ரார்த்தித்தார்கள். பிறகு மாலோலன், ராகவன், ப்ரஹ்லாதவரதன், தசாவதாரன் முதலிய எம்பெருமான்களின் மாலை பரியட்டம் சாதரா முதலியவைகள் ஸ்ரீ அழகியசிங்கருக்கு ஸமர்ப்பிக்கப்பட்டன. அவ்வமயம் ஸ்ரீ அழகிய சிங்கருடைய நேத்ரங்களிலிருந்து இரண்டொரு ஆநந்தபாஷ்பங்கள் வெளிக்கிளம்பி மறைந்தன. இம்மஹோத்ஸவத்திற்கு அனேகம் ஸ்வாமிகள் வந்திருந்தார்கள். அன்று ஸாயங்காலம் ப்ரஹ்லாதவரதனுக்கு வீதி உத்ஸவமும் ராத்ரி கண்ணனுக்கு டோலோத்ஸவமும் வெகு விமர்சையாக நடந்தது.

நடாதூர் க்ருஷ்ணதாஸ:

ஶ்ரீ:

பட்டாபிஷேக மஹோத்ஸவம்

1. 𑌶𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗𑍇𑌶𑌶𑌠𑌾𑌰𑌿𑌸𑌂𑌯𑌮𑌿𑌵𑌰𑌦𑍍𑌵𑌨𑍍𑌦𑍍𑌵𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌶𑍍𑌰𑌯𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍 𑌶𑍍𑌰𑍀𑌨𑌰𑌸𑌿𑌂𑌹𑌕𑌾𑌰𑌿𑌜𑌯𑌤𑍀𑌶𑌾𑌨𑌾𑌤𑍍𑌮𑌰𑌕𑍍𑌷𑌾𑌮𑌹𑌮𑍍 ।
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌰𑌙𑍍𑌗𑌶𑌠𑌾𑌰𑌿𑌯𑍋𑌗𑌿𑌕𑌰𑍁𑌣𑌾𑌵𑌾𑌪𑍍𑌤𑌂 𑌦𑌯𑌾𑌮𑍍𑌭𑍋𑌨𑌿𑌧𑌿𑌂
𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑍋𑌤𑍍𑌤𑌮𑌾𑌦𑍍𑌯𑌸𑌂𑌜𑍍𑌞𑌕 𑌯𑍋𑌗𑍀𑌶𑌮𑍀𑌡𑍇𑌨𑌵𑌮𑍍 ॥

2, 𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌾𑌰𑌿 𑌯𑌤𑍀𑌶𑌾𑌸𑍍𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌞𑍍𑌚𑌿𑌤𑌾𑌃 ।
𑌜𑍍𑌯𑍇𑌷𑍍𑌠𑍇 𑌨𑌨𑍍𑌦𑌨𑍇 𑌵𑌰𑍍𑌷𑍇 𑌮𑌾𑌘𑍇 𑌤𑍍𑌰𑌿𑌂𑌶𑌦𑍍𑌦𑌿𑌨𑍇 𑌨𑌵𑍇 ॥
𑌤𑍍𑌰𑌯𑍋𑌦𑌶𑍍𑌯𑌾𑌂 𑌶𑍁𑌕𑍍𑌰𑌵𑌾𑌰𑍇 𑌪𑍍𑌰𑌾𑌤𑌸𑍍𑌸𑌦𑍍𑌧𑌸𑍍𑌤𑌗𑌣𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑍇 ।
𑌶𑍇𑌷𑌜𑌨𑍍𑌮𑍇 𑌸𑌨𑍍𑌨𑌕𑍍𑌷𑌤𑍍𑌰𑍇 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌕𑍃𑌪𑌾𑌵𑌶𑌾𑌤𑍍 ॥

3. 𑌵𑍇𑌦𑌪𑌾𑌰𑌾𑌯𑌣𑌪𑌰𑍈𑌃 𑌶𑍍𑌰𑍌𑌤𑍈𑌶𑍍𑌚 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌰𑍍𑌵𑍇𑌦𑌜𑍍𑌞𑌾 ।
𑌪𑌟𑍍𑌟𑌾𑌭𑌿𑌷𑌿𑌕𑍍𑌤𑌾𑌃 𑌶𑍍𑌰𑍀𑌮𑌨𑍍𑌤𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌾𑌰𑍍𑌯𑌗𑌣𑍈𑌸𑍍𑌸𑌹 ॥

4. 𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌂 𑌰𑌾𑌘𑌵𑌂 𑌦𑍇𑌵𑍀𑌂 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌵𑌲𑍍𑌲𑍀𑌂 𑌮𑌨𑍋𑌹𑌰𑌾𑌮𑍍 ।
𑌰𑌾𑌮𑌂 𑌕𑍃𑌷𑍍𑌣𑌂 𑌚 𑌪𑌟𑍍𑌟𑌾𑌂𑌶𑌂 𑌵𑌿𑌷𑍍𑌵𑌕𑍍𑌸𑍇𑌨𑌂 𑌯𑌥𑌾𑌕𑍍𑌰𑌮𑌮𑍍 ॥

5. 𑌵𑌣𑍍𑌶𑌠𑌾𑌰𑌿 𑌶𑌠𑌾𑌰𑌾𑌤𑌿𑌲𑌕𑍍𑌷𑌣𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌂 𑌤𑌥𑌾 ।
𑌤𑌦𑍍𑌵𑌂𑌶𑍍𑌯𑌂 𑌨𑌰𑌹𑌰𑌿𑌶𑌠𑌾𑌰𑌿𑌂 𑌯𑍋𑌗𑌿𑌨𑌂 𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

6. 𑌸𑌰𑍍𑌵𑌾𑌨𑍍 𑌦𑍇𑌵𑌾𑌨𑍍 𑌗𑍁𑌰𑍂𑌨𑍍 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌵𑌿𑌶𑍇𑌷𑌪𑍍𑌰𑌾𑌯𑌶𑍍𑌚𑌿𑌤𑍍𑌤𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ।
𑌶𑍇𑌷𑌪𑌟𑌾𑌨𑍍 𑌗𑍃𑌹𑍀𑌤𑍍𑌵𑌾 𑌚 𑌪𑌰𑌮𑌾𑌨𑌨𑍍𑌦𑌸𑌂𑌯𑍁𑌤𑌾𑌃 ॥

7. 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾𑌷𑍍𑌟𑌮𑍍𑌯𑌾𑌂 𑌦𑌿𑌵𑍍𑌯𑌾𑌯𑌾𑌂 𑌸𑌰𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑌲𑌶𑍋𑌭𑌿𑌨𑌿 ।
𑌪𑌞𑍍𑌚𑌵𑌰𑍍𑌣𑌾𑌵𑌾𑌯𑌤𑌨𑌾𑌗𑍍𑌰𑌹𑌣𑍇 𑌸𑍍𑌥𑌿𑌤𑍍𑌵𑌾 𑌶𑍍𑌰𑌾𑌵𑌾𑌪𑌵𑌾𑌨𑍍𑌵𑌿𑌤𑌾𑌃 ॥

8. 𑌚𑌨𑍍𑌦𑌨𑍈𑌰𑍍𑌗𑌨𑍍𑌧𑌪𑍁𑌷𑍍𑌪𑍈𑌶𑍍𑌚 𑌧𑍂𑌪𑌦𑍀𑌪𑍈𑌸𑍍𑌤𑌥𑌾 𑌵𑌰𑍈𑌃 ।
𑌛𑌤𑍍𑌰𑌚𑌾𑌮𑌰𑌸𑌦𑍍𑌗𑌜𑌾𑌶𑍍𑌵𑌾𑌭𑌿𑌨𑌨𑍍𑌦𑌿𑌤𑌾𑌃 ॥

9. 𑌶𑍍𑌰𑍀𑌮𑌦𑍍𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌵𑌟𑌹𑌂𑌸𑌦𑍍𑌵𑌨𑌾𑌯𑌨𑌮𑍋𑌕𑍍𑌷𑍈𑌃 ।
𑌗𑌾𑌯𑌕𑍈𑌰𑍍𑌗𑍋𑌷𑍍𑌠𑍀𑌵𑍀𑌣𑌾𑌵𑌾𑌦𑍍𑌯𑍈𑌶𑍍𑌚 𑌨𑍃𑌤𑍍𑌯𑌨𑌟𑌨𑌾𑌦𑌿𑌭𑌿𑌃 ॥

10. 𑌵𑍀𑌥𑍀𑌂 𑌪𑍍𑌰𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍀𑌕𑍃𑌤𑍍𑌯 𑌦𑌕𑍍𑌷𑌿𑌣𑍇 𑌵𑌾𑌰𑌿𑌧𑌿𑌸𑍍𑌥𑌿𑌤𑌮𑍍 ।
𑌬𑍃𑌨𑍍𑌦𑌾𑌵𑌨𑍇 𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌂 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌂 𑌨𑌮𑌸𑍍𑌯 𑌚 ॥

11. 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌶𑌾𑌸𑌨𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌃 𑌸𑍍𑌵𑌂 𑌮𑌠𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌯𑍋𑌗𑌿𑌨𑌃 ॥
𑌪𑍁𑌨𑌶𑍍𑌚 𑌶𑍍𑌰𑍀𑌨𑌰𑌹𑌰𑌿𑌂 𑌨𑌤𑍍𑌵𑌾 𑌶𑌿𑌷𑍍𑌯𑍈𑌰𑍍𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌵𑌯𑌮𑍍 ॥

12. 𑌸𑌚𑍍𑌛𑌿𑌷𑍍𑌯𑌵𑌾𑌦𑍍𑌯𑌘𑍋𑌷𑍇𑌣 𑌸𑌰𑍍𑌵𑌮𑌙𑍍𑌗𑌲𑌸𑌂𑌯𑍁𑌤𑌮𑍍 ।
𑌸𑍍𑌵𑌾𑌶𑍍𑌰𑌮𑌂 𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌬𑌹𑍁𑌹𑌰𑍍𑌷𑍋𑌤𑍍𑌥𑌿𑌤𑌾𑌸𑍍𑌸𑍍𑌵𑌾𑌸𑌨𑍇 ॥

13. 𑌪𑌾𑌯𑌸𑌾𑌨𑍍𑌨𑌾𑌜𑍍𑌯𑌨𑌾𑌦𑍍𑌯𑍋𑌷𑍍𑌣𑌂 𑌸𑌂𑌸𑍇𑌵𑍍𑌯 𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌂 𑌤𑌦𑌾
𑌸𑍍𑌵𑌾𑌮𑌿𑌨𑌾 𑌚 𑌵𑌿𑌶𑍇𑌷𑍇𑌣 𑌪𑍍𑌰𑍀𑌤𑌿𑌯𑍁𑌕𑍍𑌤𑌾𑌭𑌿𑌮𑌾𑌨𑌤𑌃
𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌗𑍃𑌹𑍀𑌤𑌂 𑌸𑌹𑌮𑌙𑍍𑌗𑌲𑌾𑌕𑍍𑌷𑌤𑌮𑌹𑌾𑌨𑌿𑌯𑌮𑍍 ।
𑌪𑍍𑌰𑌾𑌪𑍍𑌯 𑌯𑌤𑍀𑌃 𑌕𑍃𑌤𑌾𑌰𑍍𑌥𑌾𑌶𑍍𑌚 𑌭𑍇𑌜𑍇 𑌸𑌰𑍍𑌵𑌮𑌨𑍋𑌰𑌥𑌮𑍍 ॥

𑌜𑌯𑌤𑍁 𑌜𑌯𑌤𑍁 𑌦𑍇𑌵𑌃 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑍋 𑌦𑌯𑌾𑌲𑍁𑌃
𑌜𑌯𑌤𑍁 𑌜𑌯𑌤𑍁 𑌨𑌿𑌤𑍍𑌯𑌂 𑌰𑌾𑌘𑌵𑌸𑍍𑌸𑌰𑍍𑌵𑌸𑌾𑌕𑍍𑌷𑍀 ।
𑌜𑌯𑌤𑍁 𑌜𑌯𑌤𑍁 𑌕𑍃𑌷𑍍𑌣𑌃 𑌸𑍍𑌵𑌰𑍍𑌣𑌗𑍋𑌪𑍀𑌪𑍍𑌰𑌿𑌯𑍋𑌽𑌸𑍌 ।
𑌜𑌯𑌤𑍁 𑌜𑌯𑌤𑍁 𑌵𑌣𑍍𑌕𑌾𑌰𑌿𑌜𑌾𑌤𑍋 𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌃 ॥
𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌾𑌰𑌿 𑌯𑌤𑌿𑌰𑌾𑌜𑌮𑌹𑌾𑌗𑍁𑌰𑍁𑌃 ।
𑌕𑍃𑌪𑌯𑌾 𑌤𑌾𑌰𑌕𑌂 𑌜𑍀𑌯𑌾𑌤𑍍 𑌕𑍀𑌰𑍍𑌤𑌿𑌰𑍍𑌮𑌾𑌨𑍁 𑌹 𑌜𑍀𑌰𑍍𑌣𑌵𑍇 ॥

𑌶𑍍𑌰𑍀𑌃

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃

𑌶𑍍𑌰𑍀𑌵𑍀𑌰𑌰𑌾𑌘𑌵𑌶𑌠𑌕𑍋𑌪𑌯𑌤𑍀𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌹𑌾𑌦𑍇𑌶𑌿𑌕

𑌪𑌟𑍍𑌟𑌾𑌭𑌿𑌷𑍇𑌕 𑌚𑌰𑌿𑌤𑍍𑌰𑌮𑌾𑌲𑌾

1. 𑌶𑍍𑌰𑍀𑌵𑌿𑌣𑍍𑌣𑌗𑌰𑍀𑌤𑌿 𑌕𑍍𑌷𑍇𑌤𑍍𑌰𑍇𑌽𑌷𑍍𑌟𑍋𑌤𑍍𑌤𑌰𑌶𑌤𑍇𑌷𑍍𑌵𑌪𑌿 ।
𑌉𑌤𑍍𑌤𑌮𑍋 𑌨𑌿𑌸𑍍𑌸𑌮𑍋 𑌦𑍇𑌵𑍋 𑌯𑌤𑍍𑌰𑌾𑌸𑍍𑌤𑍇𑌽𑌨𑍁𑌗𑍍𑌰𑌹𑌾𑌯 𑌨𑌃 ॥

2. 𑌶𑍍𑌰𑍀𑌦𑍇𑌵𑌨𑌾[illegible] 𑌜𑌨𑍈𑌃 ।
𑌯𑌤𑌿[illegible]𑌉𑌤𑍍𑌤𑌮𑍋𑌤𑍍𑌤𑌮𑌃 ।

3. 𑌤𑌤𑍍𑌰 𑌶𑍍𑌰𑍀𑌵𑍇𑌙𑍍𑌕𑌟𑌾𑌚𑌾𑌰𑍍𑌯[illegible] ॥
[illegible] 𑌕𑌨𑍀𑌯𑌸𑍍𑌯𑌾𑌂 𑌪𑌤𑍍𑌨𑍍𑌯𑌾𑌂 𑌜𑌾𑌤[illegible] ॥

4. 𑌨𑌿𑌸𑍍𑌸𑌮𑌾𑌭𑍍𑌯𑌧𑌿𑌕𑌸𑍍𑌯𑌾𑌪𑌿 𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌸𑍍𑌯 𑌪𑌾𑌦𑌯𑍋𑌃 ।
𑌜𑌾𑌯𑌮𑌾𑌨𑌕𑌟𑌾𑌕𑍍𑌷𑍇𑌣 𑌸𑍋𑌽𑌭𑌵𑌤𑍍 𑌸𑌦𑍍𑌗𑍁𑌣𑌾𑌰𑍍𑌣𑌵𑌃 ॥

5. [illegible] 𑌜𑌨𑍍𑌮𑌨𑌿 ।
𑌗𑍍𑌰𑌹𑌾𑌶𑍍𑌚[illegible] ॥

6. 𑌏𑌵𑌂 𑌜𑌾𑌤[illegible] 𑌯𑌥𑌾𑌕𑌾𑌲𑌂 𑌯𑌥𑌾𑌵𑌿𑌧𑌿 ।
𑌜𑌾𑌤𑌕𑌰𑍍𑌮𑌾𑌦𑌿𑌸𑌂𑌸𑍍𑌕𑌾𑌰𑍈[illegible] 𑌸𑌂𑌸𑍍𑌕𑍃𑌤𑍋 𑌮𑌹𑌾𑌨𑍍 ॥

7. [illegible] 𑌚 ।
[illegible] 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌇𑌤𑌿 𑌵𑌿𑌶𑍍𑌰𑍁𑌤𑌃 ॥

8. 𑌉𑌪𑌨𑍀𑌤[illegible] 𑌵𑍇𑌦𑌵𑍇𑌦𑌾𑌙𑍍𑌗[illegible] ।
[illegible] ॥

9. 𑌶𑍍𑌰𑍀[illegible] ।
[illegible] ॥

10. [illegible] ।
[illegible] ॥

11. 𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌰𑌙𑍍𑌗[illegible]𑌦𑍇𑌶𑌿𑌕𑌾𑌤𑍍 ।
[illegible] ॥

12. 𑌏𑌵𑌂 [illegible] ।
[illegible] ॥

13. [illegible] ।
[illegible] ॥

14. 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌶𑌠𑌜𑌿𑌨𑍍𑌮𑍁𑌨𑌿𑌦𑍇𑌶𑌿𑌕𑌮𑌾𑌶𑍍𑌰𑌯𑌤𑍍 ।
[illegible] ॥

15. [illegible] ।
𑌶𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌾𑌙𑍍𑌘𑍍𑌰𑌿[illegible] ॥

16. 𑌤𑌤𑌶𑍍𑌶𑍍𑌰𑍀𑌮𑌚𑍍𑌛𑍍𑌰𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹𑌶𑌠𑌕𑍋𑌪𑌮𑍁𑌨𑍀𑌶𑍍𑌵𑌰𑌾𑌤𑍍 ।
[illegible] ॥

17. स [illegible] ।
लक्ष्मीनृसिंह [illegible] ॥

18. अथ श्रीलक्ष्मीनृसिंहश्रीचरणौ शरणं गतः ।
[illegible] ॥

19. [illegible] ।
लक्ष्मीनृसिंह [illegible] शठजिद्योगिपदयोः ॥

20. [illegible] ।
[illegible] ॥

21. [illegible] ।
[illegible] ॥

22. श्रीलक्ष्मीनृसिंहशठजि [illegible] ॥
श्रीरङ्गशठजिद्योगी [illegible] ॥

23. [illegible] ।
[illegible] ॥

24. [illegible] ।
श्रीलक्ष्मीनृसिंह [illegible] ॥

25. श्रीलक्ष्मीनरसिंहाय [illegible] ।
[illegible] नृसिंहस्य [illegible] ॥

26. [illegible] ।
श्रीनृसिंहप्रेरणया [illegible] ॥

27. [illegible] ।
[illegible] ।

28. काषायं ग्राहयामास त्रिदण्डं यतिलक्षणम् ।
वीरराघवयोगीति [illegible] ॥

29. [illegible] ॥
श्री [illegible] ॥

30. [illegible] ।
[illegible] लक्ष्मीनृसिंह [illegible] वीरराघवयोगिराट् ॥

31. श्रीरङ्गशठजिद्योगि [illegible] ।
[illegible] ॥

32. [illegible] ।
संशिक्षितः श्रीनृसिंहकैङ्कर्ये [illegible] विशारदः ॥

33. श्री [illegible]
श्रीलक्ष्मीनृसिंह [illegible] ।
[illegible] श्रीवीरराघव [illegible]
[illegible] ॥

34. [illegible]
[illegible]
[illegible]
[illegible] ॥

35. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

36. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

37. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

38. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

39. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

40. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

41. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

42. [illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ॥

43. இதி ஸாநுக்ருஹீதஶ்ரீ ந்ருஸிம்ஹேந துஷ்டோ
குருவராய தீராஜ்ஞீ வீரராகவஸூரிஃ ।
ஸூக்திரியம் ஸாவோசேஷ்டாஜ்ஞாஶாஸநாதேவ்ய: ।
ஸஜ்ஜயேப்ஸஹள வாவாயவீரே வ்ருஷண: ॥

44. ஶம்ஸிதவீரராகவஸூநிகுரோராத்மஹா நாக்ருஹாக்ஷ
நரஹரிவாதவீம்ஶயிதோ பஹள ஸ்வகுவஸ்ராஸநே ।
ஶ்ரீதஜநஸேவ்யோநஜ ஹஸஸதா ந்ருஸிம்ஹாவக்ஷ:
ஜயவிஜயாதிவிலஸத்திஹாஸ்வஸள ஸதா நந்தந: ॥

45. ஜயது ஜயது நித்யம் ஶ்ரீந்ருஸிம்ஹோயி தேவோ
ஜயது ஜயது யோகீ வீரராகவஸூரி: ।
ஜயது ஜயது வந்த்யா தேஶிகேந்த்ராத்ருவீரே
ஜயது ஜயது ஶஶ்வத்வ்யோநஸ்ஸிதேஷ்ய: ॥

46. ஜயது ஜயது நித்யம் ஜ்ஞாநதீப்த: ப்ரஹாவாநு
ஜயது ஜயது ஸோயம் ஸஞ்சாரதிவ்யதேஶாநு ।
ஜயது ஜயது ஜிஹ்வா வாதிநக்ஷத்ரவாதே
ஜயது ஜயது ஸம்ருத்தாம்ருஹதா க்ருபாவாநு ॥

47. ஜயது ஜயது நித்யம் ஶ்ரீந்ருஸிம்ஹஸ்வரூபஶ:
ஜயது ஜயது நித்யம் நந்தநோஹாயநேஷு ।
ஜயது ஜயது நித்யம் தாஸிதாஸ்யஸ்தவாஹ:
ஜயது ஜயது நித்யம் வாஸுதாவாயவய: ॥

48. இத்தம் ந்ருகேஸரிவிபோஶ்சரணாஶ்ரயஸ்ய
ஶ்ரீவீரராகவயஶோநிதேகுரோரந: ।
ஶாந்த்யாதிஸத்குணரஸாநுபவைகதீஷ்டாஸ
ஶ்ரீவாஸுதேவஜ்ஞநிதாநிவஸாயா: க்ஷேத்ராம் ॥

49. குருவரவசிதஸ்ருஷ்டிஹிதா ஸாரஸாரோ:
ஹ்ருத்ரஹிதவதேஸம்ஶோஹதோநஸ்ஸவணோ:
க்ஷஸஸேஸஸஜாதேஸம்யதாவாயவய
ப்ருவரகுணநிபத்தா ஶோஹதாம் ஶிஷ்யகணே ॥

50. வீரராகவயோகீஶஶாஸிதம் தயா ।
நிபத்தா ஶ்ரீந்ருஸிம்ஹோ தே வீப்யதாம் குருராகவி ॥

ஸ்ரீ:

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

விஜயஸ்ரீ புரட்டாசிமீ 1953ஸ்ரீ செப்டம்பர்-அக்டோபர்மீ

[தக்ஷிணாயநம் வர்ஷ ருது கந்யாமீ]

17—9—53	1௳	வியாழக்கிழமை ...	சூன்ய திதி.
18—9—53	2௳	வெள்ளிக்கிழமை ...	கன்யா சுக்ல தசமிதிதி.
19—9—53	3௳	சனிக்கிழமை ...	ஸர்வ ஏகாதசி; ச்ரவணம்; ஸ்ரீநிகமாந்த மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
20—9—53	4௳	ஞாயிற்றுக்கிழமை ...	முனித்ரய ச்ரவண த்வாதசி.
21—9—53	5௳	திங்கட்கிழமை ...	த்ரயோதசி-சதுர்த்தசி திதித்வயம்.
23—9—53	7௳	புதன்கிழமை ...	மஹாளயபக்ஷாரம்பம்.
26—9—53	10௳	சனிக்கிழமை ...	மஹாபரணி.
30—9—53	14௳	புதன்கிழமை ...	மத்யாஷ்டமி
9—10—53	23௳	வெள்ளிக்கிழமை ...	நவராத்ரி ஆரம்பம்
11—10—53	25௳	ஞாயிற்றுக்கிழமை ...	விசாகம்; ஸ்ரீ அஹோபிலமடம் **33**-வது பட்டம் ஸ்ரீ சடகோபயதீந்த்ரமஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
13—10—53	27௳	செவ்வாய்க்கிழமை ...	கேட்டை; ஸ்ரீ ஆதிவண்சடகோபயதீந்த்ர மஹாதேசிகன் திருநக்ஷத்ரம்.
15—10—53	29௳	வியாழக்கிழமை ...	கன்யாசுக்ல அஷ்டமி திதி.
16—10—53	30௳	வெள்ளிக்கிழமை ...	கன்யாசுக்ல நவமிதிதி.
17—10—53	ஐப்பசிமீ 1௳	சனிக்கிழமை ...	மஹாநவமி,ஸரஸ்வதிபூஜை; துலாரவி 7–32. (இன்றுஸங்க்ரமண தர்ப்பணம்)

ஸ்ரீ அழகியசிங்கரின் பட்டாபிஷேக ஸ்ரீமுக படனம் கலியாணபுரம்

நிகழும் விஜய வருஷம் ஆனி மாஸம் 2ம் தேதி (16-6-53)செவ்வாய்க்கிழமை மேற்படியூர் ஸ்ரீநிவாஸப்பெருமாள் ஸந்நிதியிலிருந்து ஸ்ரீ அழகியசிங்கர் திரு உருவப்படம் ஸ்ரீமுக பத்ரிகா ஸஹிதம் நன்றாய் அலங்கரிக்கப்பட்டு மாலை 4-30 மணிக்கு ஸ்வஸ்திவாசனம் வாத்ய கோஷம் சத்ரசாமராதி பிருதுகள், கட்யாணு ஸந்தானம் இதுகளுடன் திருவீதி உத்ஸவம் கண்டருளி மறுபடி ஸ்ரீ அலர்மேல்மங்கா ஸமேத ஸ்ரீநிவாஸப்பெருமாளை மங்களாசாஸனம் செய்தாகி ஸந்நிதியிலேயே மதுராந்தகம் ஸ்ரீ அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத கலாசாலை ப்ரதாந, ந்யாயாத்யாபக, வேதாந்த வாவதூக ஸ்ரீ. உ.ப. வித்வான் வில்லிவலம் நாராயணாசார்யார் ஸ்வாமி ஸ்ரீமுகத்தை ஸேவித்து விசேஷார்த்தங்களை ஸம்யக் உபபாதனம் பண்ணினார். அதன்பின் ஸூஹ்ருவத்க்ஷ ஸூவாயட்ட ஸம்பாவனைகள் ஆகி ஸ்ரீமுகம் ஸேவித்த ஸ்வாமிக்கும் ஸம்பாவனைசெய்யப்பட்டது. உத்ஸவத்திற்கு ஸமீபக்ராமங்களிலிருந்தும்அநேக ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தனர்.

அவ்வமயம் மதுராந்தகம் ஸ்ரீஸந்நிதி கலாசாலை ஹானரரி ப்ரின்ஸ்பால் கலியாணபுரம் ஈச்சம்பாடி ஸ்ரீ. உ.ப. T. ராமஸ்வாமி அய்யங்கார் M.A.,L.T., ஸ்ரீமுகம் படனத்தின் க்ரமத்தைப்பற்றி ஸங்க்ரஹமாக பேசிவிட்டு நம் ஆதுநிக ஸ்ரீ அழகியசிங்கரின் புதிய சீரிய கல்வித்திட்டத்தின் பலவிதமேன்மைகளையும் உபர்தேயதையையும் உபந்யஸித்து நம் சிறுவர்களை அதில் அந்வயித்து நலனடைய கேட்டுக்கொண்டார். ஸ்ரீ. உ.ப. வில்லிவலம் நாராயணாசார்யர் ஸ்வாமி ஸ்ரீ. உ.ப. சக்ரவர்த்தி C. N. ஸ்ரீநிவாஸகோபாலாசாரியார் திருமாளிகையில் இருந்துகொண்டு அங்கு ப்ரதி மாலை ப்ரஹ்லாத சரித்ரம்; விபீஷண சரணாகதி; ஆஸ்திக்யம்; ஆசார்யவைபவம்; இது விஷயங்களை அதிரஞ்சகமாக உபந்யாஸம் செய்தருளினார். இம்மஹோத்ஸவத்தை சிறப்புடன் நடத்திவைத்த ப்ரதானமான பொறுப்பு சக்ரவர்த்தி, C. N. ஸ்ரீநிவாஸகோபாலாசாரியருடையதே.

T. S சேஷாத்ரி தாஸன்,
தில்லை தானம்.

Regd. No. M. 4437.

முக்கிய அறிவிப்பு

ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியாவின் கார்யங்களுடைய நிர்வாஹத்தில் நேர்ந்த சில [illegible] தல்கள் காரணமாக ஏற்பட்ட விலாஸமாறுதல் கீழே கொடுக்கப்படுகிறது:-

N. Krishnamachariar,
Sri Nrisimhapria Office,
Sri Ahobila Mutt, Trivellore.

என். க்ருஷ்ணமாசாரியர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,
ஸ்ரீ அஹோபில மடம், திருவள்ளூர்.

இனி சந்தாதாரர்கள் தங்கள் சந்தாவை மேற்கண்ட விலாஸத்திற்கே அனுப்பவேணும்.

The Manager,
Sri Nrisimhapria Office,
Sri Ahobila Mutt, Trivellore.

மானேஜர்,
ஸ்ரீந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்
ஸ்ரீ அஹோபில மடம், திருவள்ளூர்

சந்தாதாரர்கள் விலாஸமாறுதல்கள் முதலிய தகவல்களை மேற்கண்ட விலாஸத்திற்கே தெரிவிக்கவேண்டும். நிர்வாஹ ஸம்பந்தமான எல்லா கடிதப்போக்குவரத்துக்களும் மேலே கண்ட விலாஸத்துடன் நடைபெறவேண்டும்.

* * * * *

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸஞ்சிகையில் ப்ரசுரிக்கப்படவேண்டிய வ்யாஸங்கள், மற்ற விஷயங்கள், ப்ரசுரிக்கப்பட்ட வ்யாஸங்கள் முதலியவை விஷயமான ஆக்ஷேபங்கள், ஸமாதானங்கள், அபிநந்தனங்கள் முதலியவைகள்மட்டும் கீழேகண்ட விலாஸத்திற்கு அனுப்பப்படவேண்டும்.

The Editor,
Sri Nrisimhapria,
Malolalayam,
Tirunagesvaram.

ஸம்பாதகர்,
ஸ்ரீ ந்ருஸிம்ஹப்ரியா,
மாலோலாலயம்,
திருநாகேஸ்வரம்.

Printed & Published by J. Rangachariar, Srikaryam, Sri Ahobilamutt, at Sri Malolapress, 30. Panagal Street, Tiruvellore. Editer P. S. Srinivasa Desikachariar, 2. Audiappa mudali Street, Vepery, Madras-7.